


கல்வெட்டு

SPECIAL ISSUES OF RAJARAJA'S COINAGE

Dr. R. Nagaswamy

Among various coins assigned to the Imperial Chola ruler Rajaraja I, one coin has on the obverse a standing human figure (Ceylon man) with what is called a Vishnupada symbol below his left arm. On the reverse is a seated figure-with the Nagari legend Sri Raja Raja. This coin has been included by Elliot. Illustrating this as F. 119, Sir. T. Desikachari in his Coins of South India has included this among the coins of Chola Rajaraja I.

'Others there are attributable to this Chola King which bear distinctly Vaishnavite emblems such as the Vishnupada or feet of Vishnu or the figure of Krishna as Muralidhara familiar objects of worship among Vaishnava sects'. p 26

Sri Vidya Prakash in his recent book 'Coinage of South India' also included this coin among the issues of Rajaraja I. (p. 84) 'A number of Copper coins depict standing King and Vishnupadam and a few other symbols like Crescent on the obverse and seated king and legend Rajaraja on the reverse sometimes a fish appears on the obverse. Often the Vishnupadam



is altogether absent and a single large fish appears on the obverse to the left of the standing King (Plate VI. 1.).

Sri Desikachari takes the presense of Vishnu pada as indicative of Vaishnava faith, while Vidya Prakash has not interpretted these symbols. I have shown earlier the so called Vishnupada device is a symbol of Chera dynasty who called themselves as Thiruvadi. Their country itself came to be called Thiruvadi Rajya. The coins with the legend 'Cherakula-raman' bears the symbol of the "pada". It is, therefore, obvious that this coin with the standing figure and Vishnupada is connected with Chera country. There is a similar coin illust-

rated in Mysore Archaeology Report XX which bears a Vishnu pada and what seems to be a bow below the left arm of the standing figure. The reverse has the seated figure and the Nagari legend Rajaraja. This would confirm our identification.

The next point to be considered is the legend Rajaraja found on the reverse of the coin. In all probability this coin was issued when the Chola emperor Rajaraja I conquered, the Malainadu country. The coin was probably intended for circulation in the Chera country.

There is another coin bearing on the obverse a standing figure with a fish below the left arm and on the reverse a seated figure with the legend, Rajaraja The fish is the emblem of the Pandyas. This coin was probably issued by Rajaraja Chola, for circulation in the Pandya country when he brought that region under his country.



Another coin of the same variety but carrying a tiger under the left arm of the standing figure also deserves mentions. This coin was obviously used for circulation in the Cholamandalam region.



These three issues with either tiger, fish or the Thiruvadi, shows that Rajaraja deliberately used the devices appropriate to the region, to respect the sentiments of the people.

பெரிச்சி கோயில்

மா. சந்திரமூர்த்தி
பதிவு அலுவலர், திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் பெரிச்சி கோயில் என்ற கிராமத்தில் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சார்ந்த சிவாலயம் அமைந்துள்ளது. இவ்வூர் தற்போது பெரிச்சிகோயில் என்று அழைக்கப்படுகிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கேரளசிங்கவளநாட்டு திருத்தியூர் முட்டத்து சிறுபெரிச்சியூர் என வழங்கப்பட்டது.

பெயர் : இக்கோயிலில் உள்ள காமகோட்ட நாச்சியாருக்குப் பெரியநாச்சியார் என்பது பெயர். நாளடைவில் பெரியநாச்சியாரின் சிறப்புக் கருதி இவ்வூர் பெரிச்சியூர் என மருவி வழங்குகிறது என்பர். இவ்வூரில் பெரிச்சி, பெரியாள் என்ற இரு சகோதரிகள் இருந்து இப்பகுதியில் ஆட்சி நடத்தியதாலும் அவர்கள் தொடர்பு கருதி பெரிச்சியூர் என வழங்கலாயிற்று என்று செவிவழிச் செய்தியால் அறிகிறோம்.

கோயில் : இவ்வூருக்கு மேற்கே இக்கோயில் அமைந்துள்ளது. கோயில் கிழக்கு பார்த்தது. ஆகமம் - காரணாகமம். ஸ்தல விருட்சம் வன்னி மரம். தற்போது கோயில், ஆண்டபிள்ளைநாயனார் தேவஸ்தானம் என அழைக்கப்படுகிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் கால கல்வெட்டுக்களில் திருத்தியூர் முட்டத்து உடையார் திருமட்டுக்கரை ஆண்ட நாயினார் என இறைவன் பெயரும், திருமட்டுக் கரை ஆண்ட நாயனார் கோயில் என்று ஆலயமும் குறிக்கப் படுகின்றன.

கோயில் சதுரமான கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டது. கோயிலின் அதிட்டான வர்க்கம் உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், வேதிகை ஆகிய பகுதிகளைக் கொண்டது. சிகரம் நாகரம், கருவறை புறச்சுவர்களில் உள்ள தேவகோட்ட மாடங்கள் கோயில் கட்டப்பட்ட காலத்தில் சிலைகள் வைப்பதற்கு ஏற்ற நிலையில் அமைக்கப்படவில்லை. இம்மரபு பாண்டிய கோயில் கட்டிட மரபை பின்பற்றி அமைந்ததாகும். தற்போது தெற்கு தேவகோட்ட மாடத்தில் மட்டும் தெட்சிணாமூர்த்திக்கு பிற் காலத்தில் சிலை எடுத்துள்ளனர். கோயிலின் ஏனைய மாடங்களில் சிலைகள் இல்லை.

பரிவார ஆலயங்கள்



கோயிலின் தென் மேற்கு மூலையில் கண பதிக்கும், வடமேற்கு மூலையில் சுப்ரமணியருக் கும், வடக்கு பகுதியில் சண்டிக்கும், வடகிழக்கு மூலையில் பைரவர் முதலிய பரிவார தெய் வங்களுக்கும் சிறு சன்ன திகள் உள்ளன. இவற் றிற்குரிய தெய்வங்களும் இங்கு வழிபாட்டில் உள்ளன. வடமேற்கு மூலையில் பெரிய நாச்சி யாருக்கென்று தனி ஆலயம் ஒன்று உள் ளது. கோயில் திருச் சுற்றில் உள்ள சிவபிரா னின் சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

பைரவர் கோயில்: பைரவர் கோயிலில் சிறப்பான வழிபாடு தொன்றுதொட்டு நடை பெற்று வருகிறது. கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம் ஆகிய பகுதிகளை ஒருங்கே கொண்ட இவ்வாலயம் இக்கோயில் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்படுவது சிறப்புடையதாகும். இங்கு வழி பாட்டில் உள்ள பைரவர் புதிய கலைமரபுடன் படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய உருவத்தைத் தமிழ்நாட்டில் வேறு எங்கும் காண்பது அரிது. இவ்வுருவம் வலது கரங்களில் திரிசூலம், தண்டம், அரவம், கத்தி ஆகிய வற்றையும் இடது கரங்களில் உடுக்கை, பிரஜாபுருஷன், அசுரன்தலை, கபாலம் ஆகியவற்றையும் ஏந்திய நிலையில் காட்டப்பட்டுள்ளது. அசுரனின் தலையை வெட்டித் தன்கையில் வைத்திருக்கிறார். கீழே உள்ள நாய் அந்த இரத்தத்தினைக் குடிக்கத் தலையை நீட்டி நிற்கிறது. தன் வலப்புறத்தே ஒரு சிவகணம் நாட்டியமாட மற்றொரு சிவகணம் கையில் தாளம் வாசிக்க, மூன்றாவது கடம் அடிக்க, நான்காவது சிவகணம் மத்தளம் வாசிக்க, மத்தளம் வாசிக்கும் அச்சிவகணத்தின் முதுகின்மேல் நாய் தன் முன்னங்

கால்களை வைத்து குருதியைக் குடிக்கும் காட்சி இங்கே தத்ரூபமாக காட்டப் பட்டுள்ளது. இத்தகைய கலைப்பாணி ஆந்திரப்பிரதேசத்தில் காகதீயர் களின் தலைநகரான வாரங்கல் பகுதியில் எடுப்பிக்கப்பட்ட சிற்ப மரபுடன் ஒத்து விளங்குகிறது. சுமார் 2.5 அடி உயரமுள்ள இக்கற்சிலை மிக நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் திகழ்கின்றது இப்பகுதியினர் நவபாஷாணத்தால் இச்சிற்பம் செய்யப்பட்டது என்று கூறுகின்றனர்.

இத்தெய்வத்திற்கு வாரத்தில் வெள்ளி திங்கள் ஆகிய நாட்களில் வடைமாலை சாற்றுதல் வழக்கம். பின்னர் அதை கோயிலின் மேல் எரிந்து விடுவர். இவற்றைக் காக்கை முதலிய பறவைகள் அணுகுவதில்லை என்று கூறுகின்றனர்.

அம்மன் ஆலயம் : இவ்வாலயம் கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. இறைவி சமீபவல்லி என்ற வடமொழிப் பெயருடனும் பாகம் பிரியாள் என்ற தமிழ்ப் பெயருடனும் அழைக்கப்படுகின்றாள். நின்ற நிலையில் உள்ள இவ்வுருவம் வலக்கரத்தில் அல்லி மலர் ஏந்தி இடக்கரத்தைக் கீழே தொங்கவிட்டுக் காட்சி அளிக்கின்றது. தலையைக் கரண்ட மகுடமும், காது களை மகர குண்டலங்களும், இடையை ஆடையும் அணி செய்கின்றன. உயரம் சுமார் 3'. சதுரமான கருவறை, அர்த்த மண்டபம், முகமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டு இவ்வாயைம் விளங்குகிறது. கல்வெட்டுக் களில் இத்தெய்வம் 'பெரிய நாச்சியார்' என்று குறிக்கப்படுகின்றது. சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியனின் 14-வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு பெரிய நாச்சியாருக்கு அளித்த நிலக்கொடையைக் குறிக்கிறது இக்கோயில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

விமானச்சிற்பங்கள்

இக்கோயில் விமானத்தைச் செங்கல்லாலும் சுதையாலும் செய்யப் பட்ட உருவங்கள் அலங்கரிக்கின்றன. விமானத்தின் வடக்குப் பகுதியில் கரி உரித்த தோளான், நான்முகன், திருமால், கொற்றவை, வேணுகோபாலன், சாமரை ஏந்திய அணங்கு, அஞ்சலித்து நிற்கும் அடியார் ஆகிய உருவங்கள் அணி செய்கின்றன. மேற்குப் பகுதியில் வைரவன், நடமாடும் கண்ணன், கிருஷ்ணனின் ஜலக்கிரீடை. தாருகா வனத்தில் உள்ள முனிவர்களின் முன் மோகினியின் தோற்றம், வணங்கும் துறவிகள் ஆகியோரின் சுதை உருவங்கள் இடம் பெற்றுள்ளன. கிழக்குப் பகுதியில் ஐங்கரன், தெற்கே பிச்சைபுகும் பெருமான், பிரசவிக்கும் பெண், பணிப்பெண், தென்முகச் செல்வன், தத்துவம் கற்கும் துறவிகள், ஊர்த்துவ தாண்டமாடும் சிவபிரான், அயருது ஆடும் காளி, நான்முகன் ஆகியோரின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

இவை அழிந்து கொண்டிருக்கும் நிலையில் தற்போது உள்ளன. இச்சுதை உருவங்கள் கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் கலைப்பணியாகும்.

மரச்சிற்பங்கள்

இப்பாண்டியர்காலக் கோயில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சிவகங்கைச் சமஸ்தானத்தின் ஆளுகையின்கீழ் வந்தபோது அவர்களால் செய்யப்பட்ட திருப்பணியின் கலைப்பணிகள் தனித்தன்மையுடன் இங்கு விளங்குகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை முகமண்டபம், மகா மண்டப வாயில்களை அணி செய்யும் மரக்கதவுகளாகும். இக்கதவுகளில் அன்னப்பறவைகள், அங்குசம் ஏந்திய ஐங்கரன், மயில் வாகனன், தட்டை தலையில் தாங்கி வரும் வட்டணைகள், துவாரபாலகர்கள், கொற்றக் குடை யேந்தும் கணங்கள், அமர்ந்த நிலையில் உள்ள அழகிய சிம்மங்கள், மத்தளம் அடிக்கும் கலைஞன், நாட்டியமாடும் மங்கை ஆகிய மரச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வடக்குக் கதவில் அஞ்சலிக்கும் நிலையில் உள்ள அரச உருவம் சிவகங்கை மன்னனாதல் வேண்டும். இங்கு இதைத் தவிர இரண்டு மத்தளங்கள் வாசிக்கும் இசைக்கலைஞன், நாதசுரம் ஊதுவான், நட்டுவன், நாட்டியப்பெண், ஆகிய உருவங்களும், அன்னம், கிளி ஆகிய பறவைகளும், யாளி முதலிய புராணவிலங்குகளும், லிங்கம், ரிஷபாரூடர் முதலிய தெய்வங்களும் செதுக்கப்பட்டுள்ளன. சுமார் 6 அடி உயரம் 2 அடி அகலம் கொண்டு விளங்கும் இக்கதவு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் செய்யப்பட்ட சிவகங்கை அரசர்களின் பணியாகும்.

கோபுரம்: வாயில் கோபுரத்தின் மாடங்கள் முற்றிலும் இடிந்த நிலையில் முட்செடிகள் மண்டிக்கிடக்கின்றன.

செப்புத் திருமேனிகள்: இக்கோயிலுக்கு உரிய ஆடவல்லான், சிவகாமசுந்தரி, திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், பிரதோஷநாயகர், சோமாஸ்கந்தர், பைரவர், அஸ்திரதேவர் ஆகிய செப்புத் திருமேனிகளை தற்போது பாதுகாப்பிற்காக மதுரை ஆயிரங்கால் மண்டப அருங்காட்சி யகத்தில் வைத்துள்ளனர். இவற்றில் சில பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சார்ந்தவையாகும்.

கல்வெட்டுக்கள்: இக்கோயிலில் 1924-ஆம் ஆண்டு மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் 35 கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன. சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன், மூன்றாம் குலோத்துங்கசோழன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் இங்குள்ளன.

இவ்வூருக்குச் ‘சிறுபெரிச்சியூர்’ என்று கல்வெட்டுக்களில் பெயர் குறிக்கப்படுகிறது. இவ்வூர் கேரளசிங்க வளநாட்டு திருத்தியூர் முட்டத் தில் இருந்ததாக அறிகின்றோம். இக்கல்வெட்டுக்கள் குறிப்பாகச் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன்காலத்தில் அவைக்களப்புலவராக விளங்கிய காரணைவிழுப்பரையர் என்பாரைக் குறிக்கிறது. மற்றும் சிறுபெரிச்சியூரில் உள்ள புலவர்களில் கொடிக்கொண்டான் பெரியான் ஆதிச்சதேவன் என்ற புலவனைப் பற்றிய குறிப்பையும் காண்கிறோம். இவ்வூரின் ஓடும் ஆறு

மட்டியாறு எனத் தற்போது அழைக்கப்படுகிறது. இவ்வாற்றின் வடகரையில் தற்போது கோயில் அமைந்துள்ளது. கி.பி. 13-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கல்வெட்டுக்கள் இவ்வாற்றின் கரையில் அமைந்துள்ள கோயிலை 'திருமட்டுக்கரை ஆண்ட நாயனுர் கோயில்' என குறிக்கக் காண்கிறோம். இக்கோயில் இறைவனுக்கும், காமகோட்டத்து அம்மனுக்கும் விளக்கு எரிக்க நிவந்தங்கள் அளித்தது பற்றியும், நிலக்கொடை அளித்தது பற்றியும், முக மண்டபம் கட்டுவித்தமை பற்றியும், கல்வெட்டுக்கள் குறிக்கப்படுகின்றன. இக்கோயிற்கல்வெட்டுக்களில் சோணுடு வழங்கியருளிய சுந்தர பாண்டியனின் 14-வது ஆட்சியாண்டைக் குறிக்கும் கல்வெட்டே பழமையானது. இக்கோயில் கி. பி. 13-ஆம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் (கி. பி. 1230) கட்டப்பட்ட பிற்காலப் பாண்டியர் பணியாகும்.

ஓலைச்சுவடி

இக்கோயிலின் சொத்து விபரங்களைக் குறிக்கும் சுவடி ஒன்று ஊர் கணக்கரிடம் உள்ளது. இது இக்கோயிலுக்கு உரிய நஞ்செய் நிலம் 268 மாவும், அரைமா அரைக்காணி முந்திரியும், புஞ்செய் குறுக்கம் 30 அடங்கிய நிலப்பகுதியைக் குறிக்கிறது. இச்சுவடியை ஆண்டுதோறும் மார்கழித் திருவாதிரை நாளில் சுவாமி எழுந்தருளும்போது சுவாமி முன்பு ஊர் கணக்கர் படித்துக் காட்டுதல் வழக்கம்.

1 சாலிவாகன சகாப்தம் . . . . சுகந்தநாதசுவாமி சௌமிய வல்லி அம்மனுக்கு சுந்தரமூர்த்தி ஈஸ்வரர் உண்டலம் தீர்த்து எழுதி கொடுத்த பட்டயமாவது

2 கீழ்பாற்கெல்கை பொன்னுங்குடி கண்மாய் நீர்பிடிக்கும் மேற்படி கண்மாய் உள்வாய் வன்னிமரத்துக்கும் செங்குத்தான மடைக்கும் விரிசிலை ஆற்றுக்கும் மேற்கு

3 தென்பாற்கெல்கை மேற்படி விரிசிலையாற்றுக்கும்-பூசநாதன் புஞ்செய்க்கும் குத்துக் கல்லுக்கும் படுக்கை சூலக் கல்லுக்கும் கொங்கரான்ஏந்தல் வடகரைக்கும் மேற்படி ஏந்தல் நீர்புடிக்கும் கல்லுக்கும் பண்ணவயல் புறவுக்கும் கண்டணி வடகரைக்கும் வடக்கு-

4 மேல்பாற்கெல்கை பண்ணைகண்மாய் பிறகரைக்கும், பெரிச்சி கோயில் கலிதீர்த்த அய்யனர் கோயிலுக்கும் முட்ட நாச்சியான் புளிக்கும் புறவுக்கும் திருமணிமுத்தாறு நதிக்கும் பிள்ளையார் தம்மத்துக்கும் கிழக்கு-

5 வடபாற்கெல்கை பெருமதூர் வயலுக்கும் செட்டியார் குள தம்மத்துக்கும் பண்ணை திருமான் ஏந்தல் வடகரைககும், தவசி கண்மாய் வடகரைக்கும் எல்கை நாதன் பொட்டலுக்கும், கொத்தனி கருப்பன் கோயிலுக்கும் தெற்கு

6 இதற்குள்ளான பெரிச்சி கோயில் கிராமம் க பட்டமங்கலம் உட்கிடை பெரிச்சி வயல் உ-செம்பனூர் உட்கிடை குசக் குடியன் ங-கீழ்க் கோட்டை உட்கிடை ஊடணி ஏந்தல் ச-கண்டர மாணிக்கம் உட்கிடை பெருமதூர் வயல் ரு

7 ஆக இதற்குள்ளான நஞ்சை நிலம் உா கூ௰அ மாவும் அரை காணி முந்திரியும் புஞ்சை குறுக்கம் ங௰ அதில் வறக் கூடிய வருமானத்தை சுவாமி உத்தரவின் பேரில் செலவு செய்து வருகிறது.





நாட்டிய மகளிர் சிற்பங்கள், அம்மன் சந்நிதி, சிதம்பரம், தென்னார்க்காடு மாவட்டம், கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு.

தளவாய் முதலியாரவர் பேரில்

அமுதரஸ மஞ்சரி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சீரியதாய்க் கோவடக்குஞ் செய்கையாற் பாணியது
வாரியே யுட்கொள்வ தானும் - பேரழகு 258

கும்பத் தினிதமர்ந்த கொள்கையாற் கும்பனைப்போல்
நம்பத் துணையமுத நாதனே - கொம்பலாபோல் 259

ஏடு 21

ஆகாச மீன்ற வறிவிலார்கண் டாலுமுடனே
வாதாக வத்தோஷ மாற்றுதற்கே - யோகையுடன் 260

பால்மாத்தி னமம் பகருமென்பார் நீரணுகா
வேல்மாத்தி னமமார் விள்ளுவார் - நூன்முறையே 261

தாயுந் தமருந் தவங்டந்து வாடாமல்ப்
பேயும்பொய் சொல்லிப் பிழையாமற் - காயமது 262

பார்க்குந் தொறும்புதிதாய் பார்க்கப்பார்க் கக்காதல்
ஆர்க்கு மடங்கா தருளியே - வார்க்கொண் 263

டடர்ந்து திரண்டிடங்கொண் டண்ணுந்து விம்மிப்
படர்ந்து சுணங்கு பரந்து - தடங்கொண் 264

டிணைத்துத் ததும்பி யிறுமாந்து சாந்த
மணைத்துப் புளகமரும்ப பணைத்துத் 265

தளதளத்து வட்டமிட்டுத் தங்க மயமாகிப்
பளபளப ளென்றளகு பாய்ந்து - வளமருவு 266

முத்தாரம் பூண்ட முசித்தாளக் கண்கறுத்து
வித்தார மேனி வெழுவெழுத்து-முத்துமுத்தாய் 267

நெற்றி வெயர்த்து நெடுமூச் செறிந்துசெவ்வாய்
முற்றும் வெழுத்து முகம் வெழுத்துச்-சிற்றிடைபோய் 268

அன்னநடை யிட்ட டிவயிறு தான்கனத்துக்
கன்னங் குளிந்துகயற் கண்குளிந்து-தன்னுடலில் 269

ஓதுகின்ற பச்சை நாமப்பொடி படர்ந்துகொண்ட
காதலன் மேல்வெறுப்புக் காணமல் சீதத் 270

திருப்புளிமா லாகாமல்ச் சீமான்-பொசிப்பில்
விருப்பமின்றி வார்த்தை மெதுவாய்-உரைப்பதன்றி 271

மெய்நொந்து மெள்ளமெள்ள வேவயிறு நொந்தெடுப்போர்
கைவந்த பால கனேயீன்ற-தெய்வந் 272

ஏடு 22

ஏடு 23

ஆலடியூருக் கடுக்குமே தோவாழை
நூலிடையே சிங்கபுர நோக்குங்காற் - பாலமதிற் 290

சுட்டி வனைந்தபசுந் தோகையல்கு லேநாகப்
பட்டினமென் ரூரும் பகர்வாரே - கட்டுகின்ற 291

செஞ்சதங்கை தண்டை சிலம்பு புலம்புபதங்
கஞ்சநல்லூ ரென்றலவோ கட்டுரைப்பார் - வஞ்சியுன்றன் 292

பாதாதி யாகப் பகரு முருப்பழகு
வேதாவென் னென்று விதித்தானோ - மாதேயுன் 293

கேசாதி பாத தும்பொழுதிரதிக்
கேசாதி பேதமுண்டோ கிள்ளையே - பேசவுற 294

வானவ ரம்பைமணி மார்புதைக்க வேவுவரோ
வானவ ரம்மைநிகர் மாதரரே - தானமுறு 295

கும்பக் களமணிக் கோட்டை பணைத்த முலைக்
கும்பக் களப்பெனக் குப்பகையோ - நம்புமெனைக் 296

கூடலையே யல்குறனைக் கூடலையே பாயுமெனக்
கூடலையே தீரத்தேனக்க கொள்ளுங்கால்த் - தேடரிய 297

கொஞ்சத் தனமுன் குணத்தினுக்கா மோயெனக்காங்
கொஞ்சந் தனமுகந்து கொள்வேனே - யஞ்சா 298

தடவா சுகியென் றறைந்திலையே யீங்கி
தடவா சுகிரதம னைந்தாற் - கடல்சூழும் 299

மாதரையே நிந்தைசொல் மாதரையே யுற்றுமற்ற
மாதரையே நானு மருவேனே - நாதத் 300

தவள வளைக்கை தாயாமே நீயே
தவளவளைப் போலிருப்ப தாமோ - குவலயத்திற் 301

ஏடு 24

கற்புடையாய் நீயுமுன் கற்புடையே னும்வெகு
கற்புடை யாய்த்தன்கைக் கற்புடையாய்ச் - சொற்புகழ்சேர் 302

பாவா யெனக்கமுவப் பாவா யினியகரும்
பாவாய் மொழிமதுரப் பாவாய்கேள் - மேவாத 303

தத்தைமன தில்வைத்தோ வேத்தை மொழியலைநீ
யத்தைநினை யாதேனா யத்தைநினை - யத்தைதரு 304

கோதா யொருசொல் லெனக்கோதா யின்தென்னகணக்
கோதா யறிந்தாலுங் கோதலவே - நீதி 305

யரவணைப்ப தல்லோ வறிவுடைமை நீயுன்
னரவணைக்கி லென்கவலை யாறும் - அரிவையர்க்கே 306

யாதரவே வேண்டு மதிலு மெனக்கெனிலோ
வாதரவே வேண்டு மமுதமே - யோதுகின்ற 307

வெல்லா மதியுமெனக் கிப்படியாச் சேசிவனே
யெல்லா மதியுமினி யென் செய்வேன் - சொல்லுகேன் 308

கோதை தனைப்பார்த்துக் கூறும் பொழுதினிலே
பேதமை மாதும் பிரியமாய்க் - காதலுடன் 309

சாதிச் சவாதுநறுஞ் சந்தனமுந் தானெடுத்து
மீதிச்சை யாக மிகப்பூசி - கீதநிறை 310

காம்போதி கல்லியாணி காந்தார மும்பாடித்
தாம்பூலமு மெனக்குத் தந்தருளிக் - காம்பலாசேர் 311

தூங்குமஞ்ச மிட்ட அழகுமெத்தை மேற்புழுகு
மோங்கு மஞ்சள் வாடையும்வந் தூடாடத் - தாங்கி 312

யெனைமடியின் மேலே யிருத்திமுத்த மிட்டாள்
தனைநானு முத்தமிடத் தானே - விளையமிட்டுக் 313

கட்டி யணைத்த சுகத்தொழி லெத்தனை
கிட்ட நெருக்கிய கிறுத்திய - வட்டம 314

தெத்தனை யற்புதமிக்கு தப்புயல்
வைத்த திருப்பதி மத்தியி - லத்தொழில் 315

மெத்த விசித்திரம்வி சித்தி ரமெனச்சு
ரத்ததினி லிச்சை தரத்தர - வுத்தமமாம் 316

ஏடு 25

ஐந்து வகையான வாலிங் கனவிதமுந்
தந்தியலுஞ் சும்பனங்கள் தாடனங்கள் - இந்தவகை 317

யான நகக்குறியும் பற்குறியு மாங்கதர
பானம் பதினென்றும் பண்ணியபின் - மேன்மைபெற 318

மார்தந்திர வாகம்மந்த வாதிசைந்த தாகுமென்று
வீரதண்டை யொலிடுந்தேய வீகமொன்றே – வேரிலங்கு 319

காதணிந்த தோடசைந்த காலணிந்த பாடகங்கள்
மீதசைந்த வார்சிலம்பு மேபுலம்ப - வேதுலங்கு 320

போதுதிர்ந்த போதிலிந்த்ர போகமென்று கூறுகின்ற
காதலின்ப மார்புரிந்த காரணங்கா - ணீதலது 321

கோட்டுமுலை யார்காமக் கோட்டிக் கிசைந்துகலைக்
கோட்டு முனியுமயல் கொண்டதுவும் - நாட்டிடத்திற் 322

காமப்பா லாமுன் கருணைப்பால் மேன்மையன்றோ
வாமப்பா நீயேயதி கங்காண - மாமதனும் 323

அம்பாலே யன்றோமுன் னுதிக்கஞ் செய்தானே
சொம்பாமுன் பேரெளிதோ சொல்லுங்காற் - கம்பளத்தார் 324

கட்டாக வந்துவந்து கண்டுநிற்பா ராணுவத்தார்
பட்டாள வாரிப் படை நெருங்க - நட்டுதறி 325

பலகவர்த்தீ வட்டி பருதியொளி காட்ட
யிலகுபகல் வெற்றி நிலவேய்ப்பச் - சலதி 326

யெறிதிரை கள்தானே யிருபாலும் மாறி
மறுகி விழுமாறு மான - விறுகியெழு 327

கொங்கை குலுங்கக் குலவளையெல் லாங்குலுங்க
மங்கைமார் வெண்சா மரையிரட்ட – மங்கலசொற் 328

சங்கீத பாகவதர் தத்தளங்கு தாவெனவே
மங்காத ராக வகைபாட - விங்கிதத்தால் 329

இந்திராணி மான வியலும் பரதமுறை
சந்திரோ தையவதனத் தாராடச் - சந்தமிடுங் 330

கட்டியங்க ளார்ப்பக் கனசுருதி யோர்வாழ்த்தப்
பட்டாணி மார்கள்சலாம் பண்ணிநிற்ப - கட்டழகு 331

சேர்சுப் பிரமணிய தீர னுதவியகு
மார சுவாமி மன்னன் – பார்புகழுந் 332

தென்னுறை வாழுஞ் சிவசயில பூபாலன்
பொன்மேவு மெல்லப் பழுபால - னென்றும் 333

இவருஞ் சிறுதாதை யென்று மகிழ
அவரவருக் கங்கங் கருள்வோன் - சிவனுதவு 334

தேவைக் குமார சுவாமிதனைச் சேவைசெயு
மாவைக் குமாரசு வாமிமன்னன் - பூவுலகின் 335

வாயற் குமார சுவாமிமுகிற் சைவர்குல
நாயகமா மாயூர நாதவேள் - நேய 336

உய்யவே வந்தபிரா னுற்பலர்பூ மாலிகையான்
தையல்பா கந்தருசு தாகரவென் - மெய்புகலுஞ் 337

சங்கநிதி போல்வருதீத் தாரப்ப ராசேந்த்ர
னிங்கிவர்கள் பக்கத் தினிதிருப்ப - யெங்கணுமே 338

யின்னுனென் றேத விசைந்ததா னுபதிசெஞ்
சொன்னு வலர்க்குறவு சுப்பயவேள் - முன்னூலான் 339

மிக்க வறிவில் விதானத்தில் நட்பில்வெகு
சக்கியன் செஷப் பயவித்தாரமால் - முக்கியமாம் 340

பேர்வரத ராசப் பெருமாளைப் போற்றியருள்
சேர்வரத ராசதிட விசையன் - பேரருள்செய் 341

ஏடு 27

நம்பர் கயிலாச நாதர்சிவ காமவல்லி
யம்புயத்தாள் போற்றியநல் லண்ணல்மால் - கும்பனையே 342

போலப் பனுவல்ப் புலவோர்க் குதவிபுரி
வேலப்பன் கீர்த்தி விதானிகண - தாலகக் 343

கணக்கும் வழக்குமேது காரியமு மேலா
யிணக்குந் திருணி யெவையு - மணக்குங் 344

சரணிகா சிங்க முபகார திடசாரி
தரணிபுக ழட்டாவ தான - முரைசெய் 345

மனைக்காவ லப்பெருமாள் வாய்மை மதிமந்திரி
கனகார்ய மாகலுங் காலை - யினிதாக 346

வற்த்தகருங் குச்சிலியா மாருட்டருந் தோகையாய்
வைத்தநிதி யைச்சிலபேர் வாங்கி வைப்ப - அத்தருணம் 347

வங்கர் தெலுங்கர் மகதர் மலையாளர்
கொங்கர் குகுதா குருநாடர் - அங்கர் 348

தடமகுட வேந்தர் வந்து சந்தித்து நிற்ப
வடகர் குடகர்மற்ற மன்னர் - விடுமோலை 349

வந்தவகை யெல்லாம் வயித்திலிங்க வேளினிதாய்ச்
சிந்தை மகிழ்ந்திடவா சித்துநிற்பச் - சொந்த 350
மனமாத்தைக் காரியங்கள் வந்து வகையாகத்
தினமு மளகப்ப மால்செப்ப - மனமகிழ்ந்து 351
தேவேந்திரன் குன்றைத் திருமலையப்பன்கருணைக்
கோவேந்தன் மேவுங் கொலுவிலே - பாலாக்குக் 352
கங்கணமு மோதிரமுங் கண்டிகையுந் தண்டிகையுந்
தங்கக் கடுக்கன் சரப்பளியு - மிங்கிதலாற் 353
சாலுவைகள் சாதிரைபீ தாம்பரங்கள் கட்டுவற்க
மேலு மதிக வெகுமதிகள் - ஏலவே 354

ஏடு 28

நல்லபுகழ்க் காமாட்சி நாயக்கன் கொண்டுவந்து
நல்கவே வாங்கியெங்கோ னல்கினன் - சொல்ல 355
வளகேசன் போலிருந்தா னுங்கே நினைந்தெ
னுளமீதி லன்னோர் முன்னே - யிளமூரல் 356
செய்தான் தளவாய் திருமலையப் பன்சிலேவே
ளெய்தான் கண் . . . . ப . . த்திலே - மெய்தாங்கு 357
காதலையே கொண்டுவிர கம்பெருகும் வேளையில்நீ
தூது சொல்ல வென்னுயிராய்த் தோன்றினையே - யாதியினன் 358
தேடுந் தவம்போலுஞ் செய்யுணீ ரில்லாமல்
வாடும் பயிர்க்கு மழைபோலும் ஆடவர்க்குங் 359
கிட்டவா னந்தமெல்லாங் கிட்டினபோல் வந்துதித்தா
யட்டாலுங் குன்று வமுதமே - சிட்டர்பிரான் 360
செம்பவள வாயுந் திருமுகமு மெய்க்கருணை
யம்பகமுஞ் செம்பொன் னரநாணுஞ் - செம்பொன்மணி 361
தாங்குங் கிரீடபதி சக்கிரபதி யுக்கிரபதி
பாங்கி லிசைந்த படைவாளும் - பூங்கமலஞ் 362
சங்கள் துலங்குதடக் கையுற்ற ரேகைகளு
மங்குலியி லிட்டகணை யாழிகளும் - மெங்கோமான் 363
காதிலிட்ட ரத்தினக் கடுக்கனும் பொன் னுடையரை
மீதிலிட்ட வச்சிரமணி மேகலையு - நீதிமுகில் 364
செக்கச் சிவந்த திருவடியும் பொன்மார்பு
மொக்கக்கண் கண்டெ னுளங்குளிர்ந்தேன் - மெய்க்கருணை 365
வாரி யனையதள வாயெங்கோன் றன்குணம்போ
லாருங் கருணை யமுதமே - பாரினியெவ 366
மாலைநீக் கும்படியே மாலையனை யான்குவளை
மாலைநீ வாங்கிவர வேணுஞ்-சாலவிரு 367
பூமாதும் வீரப் புயமாது மிக்குசெய
மாமால்போல் வாழி மகிழ்ந்து 368
திங்கள் வதனன் திருமலையப் பன்விசைய
மங்களகல் யாண மகராசன் - பொங்குகிளை 369
வாழிசெய செங்கோன்மை வாழிசெல்வ நீடூழி
வாழி யுலக மகிழ்ந்து
அமுதரசமஞ்சரி முற்றும். 370

பாண்டிய நாட்டில் சமணசமயம்

வெ. வேதாசலம்
அருங்காட்சியகக் காப்பாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழகத்தின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் பாண்டிய நாட்டில் சங்க காலத்தே சமணசமயம் சிறப்புற்று விளங்கியது. இதனை நிலைநிறுத்தும் சான்றுகளாக மதுரையைச் சுற்றிச் சமணர் வாழ்ந்த குகைத்தளங்களும் அவற்றிலுள்ள தமிழிக் கல்வெட்டுக்களும் அமைந்துள்ளன. முற்காலப்பாண்டியர் காலத்தின் தொடக்கத்தில் சமணசமயத்தின் செல்வாக்கு பாண்டிநாட்டில் மிகுந்திருந்தது. சம்பந்தரின் பாண்டிநாட்டு வருகை பாண்டிநாட்டில் சமணத்தை முற்றிலும் ஒழித்துவிட்டது. ஒழித்துவிடவில்லை என்று இருவேறு கருத்துக்கள் ஆராய்ச்சியாளர்களிடையே நிலவுகின்றன இவற்றில் இரண்டாவதாகக் கூறப்படும் கருத்தே பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. இதற்குரிய ஆதாரங்களும் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. சம்பந்தருக்குப்பின் முற்காலப்பாண்டியர் காலத்தின் இறுதியிலும், இடைக்காலப்பாண்டியர் காலத்திலும், பிற்காலப்பாண்டியர் காலத்திலும் சமணசமயம் செல்வாக்குப் பெற்றுப் பாண்டி நாட்டில் தொடர்ந்து நிலைபெற்றிருந்தது.

இதற்குரிய ஆதாரங்களையும் இக்காலங்களில் இருந்த சமணம் குறித்த செய்திகளையும் கல்வெட்டுக்கள், சிற்பங்கள் முதலியவற்றின் துணைகொண்டு 1. சமணர் கோயில்கள் 2. உதிரியாகக் கிடைக்கும் சமணத்தீர்த்தங்கரர் திருமேனிகள் 3. மலைகளில் குகைத்தளங்களில் சமணமுனிவர்கள் வாழ்ந்த சமணப் பள்ளிகள் என்ற மூன்று பிரிவுகளில் அடக்கி இக்கட்டுரையில் காணலாம். அண்மையில் அறியப்பெற்ற பல புதிய செய்திகள் இக்கட்டுரையின் முடிவுகளுக்கு வலுவூட்டுகின்றன.

சமணர் கோயில்கள்

பாண்டிநாட்டில் பலவிடங்களில் முற்காலப் பிற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த சமணசமய கட்டடக் கோயில்கள் (Structural temples), குடைவரைக் கோயில் (Rock-cut-temple) இருந்திருக்கின்றன. சித்தன்னவாசலில் குடைவரைக் கோயிலும், குறண்டி, எருக்கன்குடி, சுத்தமல்லி, கோவிலாங்குளம், அனுமந்தக்குடி, ஆகிய இடங்களில் கட்டடக்கோயில்களும் இருந்தமைக்குக் கல்வெட்டுக்கள், சிற்பங்கள் சான்றுகளாக அமைகின்றன கட்டடக் கோயில்கள் பல அழிவுபட்டுச் சிதைந்த எச்சங்களோடு நிற்கின்றன. குடைவரைக்கோயில் மட்டும் கல்வெட்டோடு அதிக சிதைவின்றி இன்றும் நின்று நிலவுகிறது.

கட்டடக் கோயில்கள்

குறண்டி : இவ்வூர் பாண்டிநாட்டு சமணசமய வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்புப் பெற்றதாகும் இராமநாதபுர மாவட்டம் அருப்புக்கோட்டைப் பகுதியிலுள்ள இவ்வூரில் சமணப் பெரியார்கள் தோன்றிப் பாண்டிநாட்டிலிருந்த சமணப் பள்ளிகளுக்குச் சென்று வாழ்ந்திருக்கின்றார்கள் இவ்வூரார் பல சமணப்பள்ளிகளுக்கு அறக்கொடைகளை அளித்திருக்கின்றார்கள். இங்கிருந்த அறிவர் கோயில் 'வெண்புநாட்டுக் குறண்டி திருக்காட்டாம்பள்ளி' என்றும், பராந்தக வீரநாராயணன் என்ற பாண்டிய மன்னன் பெயரால் 'பராந்தகப் பர்வதமாயின

தென்வட்டைப் பெரும்பள்ளி' என்றும் பெயர் பெற்றிருந்தது. இக்கோயில் இன்று இல்லை. இக்கோயிற் கட்டடப் பகுதியைச் சேர்ந்த கற்கள் சிலவற்றில் காணப் பெறும் கல்வெட்டுப் பகுதிகள் இக்கோயிலுக்கு அளிக்கப் பெற்ற அறக்கொடைகளைத் தெரிவிப்பனவாய் இன்றும் திருச்சுழியலுக்கு அருகிலுள்ள பள்ளிமடம் காலநாதசுவாமி கோயிற் கட்டடப் பகுதிகளோடு காணப்படுகின்றன. இவற்றில் மாறஞ்சடையன் காலத்தைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களால் வெண்புநாட்டுக் குறண்டி திருக்காட்டாம்பள்ளித் தேவர்க்கு (கரு)நிலக்குடி நாட்டுக் குன்னூர் சா...... ங்குணத்தான் திருவிளக்கு எரிப்பதற்குத் திங்கள் பதினுழி நெய்யினுக்காக ஐம்பது ஆடுகள் அளித்திருக்கின்ற செய்தியையும் குறண்டி சாத்தங்காரி என்பவன் நொந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்காக ஐம்பது ஆடுகளை இக்கோயிலுக்குக் கொடுத்திருக்கின்ற செய்தியையும் திருவிளக்கு எரிப்பதற்காகத் திங்கள் அஞ்ஞாழி நெய் அட்ட ஆடு ஐம்பது குடுத்த செய்தியையும் அறிகின்றோம்.

எருக்கன்குடி: ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தில் சாத்தூர்ப் பகுதியிலிருந்த இருஞ்சோணாட்டை ஆட்சிபுரிந்த எட்டிசாத்தன் இருப்பைக் குடியில் ஒரு சமணப் பள்ளி எடுப்பித்த செய்தியை "இருப்பைக்குடி வளநகருள் எடுப்பித்த பெரும் பள்ளியும்" என்று எருக்கன்குடிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இன்று இவ்வூர் இருப்பைக்குடி > இருக்கன்குடி > எருக்கன்குடி என்று மருவி வழங்குகிறது.

சுத்தமல்லி: சிவகங்கை வட்டத்தைச் சேர்ந்த மல்லாக்கோட்டை என்னும் ஊருக்கு வடக்கேயுள்ளது சுத்தமல்லிக் கிராமம். இவ்வூரில் முற்காலப் பாண்டியரின் இறுதிக் காலத்தில் ஒரு பெறும் அறிவர் கோயில் கட்டப்பட்டிருந்தமைக்கான தடயங்கள் உள்ளன. இதன் சிதைந்துபோன கட்டடப் பகுதியின் கற்கள் இவ்விடத்தில் சிதறுண்டும் புதையுண்டும் கிடக்கின்றன. இதன் எதிரே இருக்கும் ஊருணி "பள்ளி ஊரணி" என்றும் இதனைச் சார்ந்த நிலங்கள் 'பள்ளிவயல்' என்றும் இன்றும் அழைக்கப்பெறுகின்றன. 'பள்ளி' என்ற சொல் சமணரின் இருப்பிடத்தைக் குறிக்கும். மேலும் தலையிழந்த நிலையில் இருபுறமும் இயக்கர்கள் சாமரம் ஏந்தி நிற்க சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் தீர்த்தங்கரரின் உருவம் ஒன்று பள்ளி ஊரணியின் மேல்கரையிலுள்ளது. சென்னை அரசினர் அருங்காட்சியகத்திற்கு 1949-இல் கொண்டு வரப்பெற்ற சமணத் தீர்த்தங்கரரின் செப்புப் படிமம் இங்கிருந்து தோண்டியெடுத்துச் செல்லப்பட்டது என்பதும் அது இக்கோயிலுக்குரியதே என்பதும் அண்மையில் கண்டு பிடிக்கப் பெற்றது.

கோவிலாங்குளம்: மதுரையிலிருந்து அருப்புக்கோட்டைக்குச் செல்லும் வழியில் அருப்புக்கோட்டைக்கு அருகில் இவ்வூர் உள்ளது. இவ்வறிவர் கோயில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பெற்றதாகும். இன்று இதன் அதிட்டானப்பகுதி மட்டும் எஞ்சி நிற்கின்றது. கருவறை அர்த்தமண்டபங்களுடன் கூடியதாக இது இருந்திருக்க வேண்டும். இங்கிருக்கும் இரண்டு சமணத் தீர்த்தங்கரரின் சிலைகள் 'அம்பலப்பசாமி' 'அம்மணஞ்சாமி' என்ற பெயர்களில் இன்றும் வழிபாட்டில் உள்ளன. இவற்றில் ஒன்று கி.பி. 12-ஆம் நூற்றாண்டையும் மற்றொன்று கி.பி 13-14-ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை. உடைந்துபோன பார்சுவநாதரின் சிலை ஒன்றும் இங்குள்ளது.

அதிட்டானப்பகுதியில் முதற்குலோத்துங்கனின் நாற்பத்தெட்டாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. இது அழகிய செந்தமிழ் நடையில் அமைந்தது. இதே காலத்தினைச் சேர்ந்த அரசன் பெயரில்லாத

கல்வெட்டுக்களும் இங்குள்ளன. இவ்வூர் 'வெண்புல வளநாட்டு செங்காட்டிருக்கைக் கும்பனூர்' என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. இங்கு முக்குடை நாதர்க்கு திருமண்டபத்தோடு செம்பொன்னல் திவ்விய விமானம் எடுக்கப்பட்டது. அதில் சமண உருவங்கள் செய்து வைக்கப்பெற்றன என்றும் தீர்த்தங்கரர், இயக்கி படிமங்களுக்கு உலோகத்தினல் உருவங்கள் செய்து வைக்கப்பெற்றன என்றும் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. "முக்குடையோற்கு திருமண்டபத்தோடு செம்பொற் திவ்ய விமானம் செய்து, திருக்கோயில் அதற்கேற்ப சிலைப்படிமம் செய்து வைத்து கருக்கொலிய(?) உலோகத்தினலிக்கடவுள் மேனியும் இயக்கி மேனியும் அவையிரண்டு உளவாக்கி" என்பது இக்கல்வெட்டின் வாசகமாகும். மேலும் இக்கோயிலுக்கு நிலமும் 'பெருந்துளி நீர் தப்புமாகிலும் தப்பாது நறுந் தண்ணீர் தடம்பந்தல் சமைத்தற்கு' நிலமும் அளிக்கப் பெற்றன. இவற்றின் அறக்கொடையாளர்களாக அவநிசேகரன் நெடுஞ்சாத்தன் சேனவரையன், அவநிசேகரன் சோழன், அனுத்திரமூவேந்தவேளான், மாணிக்கன், சதுர்நாமராஜ துங்க மூவேந்தவேளான் என்பவர்களும், கும்பனூர், குறண்டி, குன்றத்தூர், புத்தூர் முதலிய ஊர்களுக்குக் குரிசிலான சோழக்கோன் என்பானும் குறிக்கப்பெறு கின்றனர். இச்சமணர் கோயில் சைவ–வைணவ சமயக்கோயில் போன்றே கட்டப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அனுமந்தக்குடி: திருவாடனை வட்டத்திலுள்ள இவ்வூரில் மழநாதசுவாமி கோயில் என்றழைக்கப்படும் சமணர் கோயில் ஒன்று உள்ளது. இங்குள்ள விசய நகரத்துக் கல்வெட்டு ஒன்று (கி. பி. 1535) 'முத்தூற்றுக் கூற்றத்து குருவடிமிடி .... என்னும் ஜினேந்திரமங்கலம் என்று குறிப்பிடுகின்றது. இக்கோயிலில் இன்றும் சமணர் திருமேனிகள் உள்ளன என அறிகிறோம்.

குடைவரைக் கோயில்

சித்தன்னவாசல்: சித்தன்னவாசலில் உள்ள குடைவரைக்கோயில் அறிவர் கோயில் என்று கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றது. பாண்டியன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தில் வாழ்ந்த மதுரையாசிரியன் இளங்கௌதமன் என்பவன் 'அண்ணல்வாயில் அறிவர் கோயில் முன்னல் மண்டபங் கல்லாலேய் நிறிஇ— அக மண்டபம் புதுக்கி முகமண்டபம் எடுத்தான்' என்று இக்குடைவரைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. ஆடல்மகளிர் உருவங்களும், பாண்டிய மன்னன், அரசியர் ஆகி யோராது உருவங்களும், சமணரது வீட்டுலகத்திற்குச் செல்லும் வழியில் அமைந்த காதிகாபூமியில் காணப்படும் தாமரைப் பொய்கையும் இங்கு ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளன. மகாவீரர், பார்சுவநாதர் முதலிய தீர்த்தங்கரர் திருமேனிகள் அக மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளன

பாண்டிநாட்டில் காணப்படும் பழமையான குடைவரைக்கோயில்கள் பல சமண சமயத்தைச் சார்ந்தவை. அவை பக்தி இயக்கத்தால் சைவ-வைணவ குடை வரைகளாக மாற்றப் பெற்றன. மலையடிக்குறிச்சி, திருப்பரங்குன்றம், ஆனைமலை, முதலிய இடங்களில் காணப்படும் குடைவரைக் கோயில்கள் சைவ வைணவ குடை வரைகளாக மாற்றம் பெற்றன என்று கருதுவாரும் உளர்.

தீர்த்தங்கரர் திருமேனிகள்

சமணர்கள் வாழ்ந்த ஊர்களில் பெரிய கட்டடக் கோயில்கள் இல்லாத நிலையில் சிற்றாலயங்களிலும், மரத்தடிகளிலும் தீர்த்தங்கரர் திருமேனிகளைச் செய்து வைத்து வழிபட்டு வந்தனர். பிற்காலத்தில் சமணம் தன்னிலையிலிருந்து சரிந்தபோது இச்சிற்றாலயங்கள் அழிந்துபட்டன எனலாம். இதனல் தீர்த்தங்கரர் திருமேனிகள்

பேணுவாரற்றுத் திறந்தவெளிகளிலும், வயல்களிலும் விடப்பெற்றன. மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இதுபோல் வழிபாடற்றுக் கிடக்கும் தீர்த்தங்கரர் உருவங்கள் பல உள்ளன. சில உருவங்கள் இந்துக் கடவுள் உருவங்களாக மாற்றப்பட்டுள்ளன. சில உருவங்கள் அம்பலப்பசாமி, அமணஞ்சாமி, சமணஞ்சாமி என்று பல பெயர்களில் வழிபடப் பட்டும் வருகின்றன. இதுபோன்ற சிலைகள் பாண்டி நாட்டில் கி.பி. 9-ஆம் நூற்றுண்டிலிருந்து கி.பி. 15-ஆம் நூற்றுண்டு வரையிலும் தொடர்ந்து காணப்படு கின்றன. குறிப்பாக இன்றைய இராமநாதபுர மாவட்டத்தின் பகுதிகளிலும் இதன் தென் எல்லைகளாக இருக்கக்கூடிய இன்றைய திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளி லும் இத்தகைய சமணத்தீர்த்தங்கரரின் சிலைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இராமநாதபுரம் மாவட்டம்: இராமநாதபுர மாவட்டத்தில் பல இடங்களில் தீர்த்தங்கரர் திருமேனிகள் காணப்படுகின்றன. முதுகுளத்தூரிலிருந்து இராமநாத புரம் செல்லும் வழியில் அமைந்த கோவிலாங்குளத்தில் இரண்டு தீர்த்தங்கரர் திருமேனிகள் உள்ளன. இளையாங்குடி சிவன்கோயிலிலும், ஏரிக்கரையிலுமாக இரண்டு தீர்த்தங்கரர் திருமேனிகள் இருக்கின்றன. இது தவிர பெரியபட்டினம், கிடாரம், மஞ்சியூர், செழவனூர் முதலிய இடங்களில் தீர்த்தங்கரரின் திருமேனி களைக் கண்டறிந்து அரசினர் முன்பே குறிப்புகள் வெளியிட்டுள்ளனர்

மேலும் கோவிலார்பட்டி, புலியூரான், பாலவநத்தம், தவிசிக்குறிச்சி, குமாரக் குறிச்சி, சித்தை, இடைக்காட்டூர், ஏழாயிரம் பண்ணை, நத்தம்பட்டி, விளாத்திகுளம் முதலிய இடங்களில் சமணத் திருமேனிகள் உள்ளன. ஏர்வாடியில் தனியார் ஒருவர் கொல்லையில் தீர்த்தங்கரர் உருவம் ஒன்று உள்ளது.

கோவிலார்பட்டி: இக்கிராமம் காரைக்குடிக்கு அருகிலுள்ள பூங்குன்றத் திற்கு அருகிலுள்ளது. இவ்வூரில் கி.பி. 10-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த பெரிய தீர்த்தங்கரர் உருவம் ஒன்றும் கி.பி. 12-13 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த மற்றொரு பெரிய தீர்த்தங்கரர் உருவமும் உள்ளன. இவ்வூருக்கு அருகிலுள்ள காடு அச்சிக் காடு என்று வழங்கப்படுகின்றது. இது ஆனைமலை, அழகர்மலை முதலிய இடங்களில் குறிப்பிடப்படும் அச்சணந்திப் பெரியார் பெயரால் அச்சணந்திக்காடு என்று வழங் கப்பெற்று பின்னர் அச்சிக்காடு என்று மருவிற்று என்பர். யக்சி என்ற சொல் பேச்சு வழக்கில் அச்சி என்று திரிந்ததாகவும் கொள்ளலாம்.

புலியூரான்: அருப்புக்கோட்டையிலிருந்து திருச்சுழியல் செல்லும் பாதை யின் வடக்கே உட்புறம் தள்ளி இக்கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் வட புறம் வயல் நடுவே கி.பி. 10-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த இரண்டு தீர்த்தங்கரர் திருமேனிகள் உள்ளன. இவற்றில் ஒன்று ஐந்தலை அரவின்கீழ் அமர்ந்த பார்சுவ நாதர் உருவம். மற்றொன்று முக்குடை கீழ் அமர்ந்த நிலையிலுள்ள பகவனின் உருவமாகும்.

பாலவநத்தம்: விருதுநகருக்கும் அருப்புக்கோட்டைக்கும் இடையே இவ்வூர் அமைந்துள்ளது இவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு வடக்கே ஊர் மந்தையிலுள்ள ஒரு சதுர மேடையில் கி.பி. 12-13 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சமணத் தீர்த்தங்கரரின் உருவம் ஒன்றுள்ளது. இதனை அம்மணப்பசாமி என்று ஊரார் வழிபடுகின்றனர். இதன் பீடத்தில் 'இராவகன்' என்று பிற்காலத்துத் தமிழ் எழுத்தில் பெயர் பொறிக் கப்பட்டுள்ளது.

தவிசிக்குறிச்சி: கமுதி வட்டத்திலுள்ள பசும்பொன் கிராமத்தின் வடமேற் கேயுள்ள வயலின் நடுவே அம்மணப்பசாமி திடலில் சமணத்தீர்த்தங்கரரின் உருவம்

ஒன்று உள்ளது. இச்சிலையுள்ள பகுதியை தவிசிக்குறிச்சி என்றழைக்கின்றனர். சமணமுனிவர் தவம்செய்த இடத்தை பிற்காலத்தில் தவிசிக்குறிச்சி என்றழைத்தனர் போலும். இச்சிலையின் காலம் கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டு ஆகும்.

குமாரக்குறிச்சி : இவ்வூர் பரமக்குடியிலிருந்து இளையாங்குடி செல்லும் வழியின் நடுவே அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்புறம் அமைந்துள்ள ஏரியின் வடகரை உள்வாயில் ஒரு கிணற்றின் அருகே கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அழகிய முக்குடை பகவனின் சிலை ஒன்றுள்ளது. வழிபாடற்ற நிலையிலுள்ள இச்சிலையின் மேற்பகுதி அரிவாள் தீட்டப்படும் இடமாகி தேய்ந்துகொண்டே வரும் வருந்தத்தக்க நிலையில் உள்ளது.

சித்தை : உத்திரகோசமங்கைக்குக் கிழக்கே அரை மைல் தொலைவில் இவ்வூர் உள்ளது. இவ்வூரின் பள்ளிக்கூடத்திற்குப் பின்புறமுள்ள பொட்டலில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சமணத்தீர்த்தங்கரரின் உருவம் ஒன்று இருந்தது. அதனை அங்கிருந்து கலைத்திருடர்கள் அப்புறப்படுத்த முயன்று தோற்ற நிலையில் தற்போது அதனை உத்திரகோசமங்கையில் இராமநாதபுரராஜா தேவஸ்தானக் கட்டடத்தின் உட்புறம் வைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

இடைக்காட்டூர் : திருப்புவனத்திலிருந்து மானாமதுரை செல்லும் வழியில் வைகையின் தென்கரையில் அன்னியேந்தல் என்ற கிராமம் உள்ளது. இதன் வடகரையில் இடைக்காட்டூர் அமைந்துள்ளது. இவ்வூரின் வடபுறம் அமைந்துள்ள நவக்கிரகங்களுக்கான கோயில் ஒன்றின் பிரகாரத்தில் திருமாலாக மாற்றப்பட்ட தீர்த்தங்கரர் திருமேனி ஒன்றுள்ளது

ஏழாயிரம்பண்ணை : இவ்வூர் சாத்தூரிலிருந்து தென்மேற்காக 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர்ச் சமீன் அரண்மனைக்குத் தெற்கேயுள்ள குளக்கரை பாலத்தின் பக்கச் சுவரில் தலைப்பகுதியில்லாத சமணத்தீர்த்தங்காரின் உருவம் ஒன்று காணப்படுகின்றது.

நத்தம்பட்டி : இவ்வூர் மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும் வழியில் அமைந்துள்ள மூவரைவென்றான் என்ற ஊருக்கு அடுத்தமைந்துள்ளது. இவ்வூர்ச் சிவன் கோயிலின் வடபுறச் சுவருக்கு வெளியே கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தீர்த்தங்கரர் உருவம் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. இவ்வுருவத்தைக் கள்ளன் உருவம் என்றும் இவன் இவ்வூர்ச் சிவன் கோயிலில் திருடினான் என்றும் கூறிக் கார்த்திகை சொக்கப்பனை கொளுத்தும் நாளில் இவ்வூரார் இவ்வுருவத்தின் மீது கல்லெறியும் வழக்கம் இருந்து வருகின்றது.

திருநெல்வேலி மாவட்டம் : இம்மாவட்டத்தில் கொற்கை, காயல், குளத்தூர் மந்திரக்குளம், முரம்பன், நாகலாபுரம், வள்ளியூர், ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களில் இனங்காணப்பெற்ற தீர்த்தங்கரரின் திருமேனிகள் பற்றி முன்பே அரசினர் அறிவித்திருக்கின்றனர். அண்மையில் விளாத்திகுளம், ஆழ்வார்திருநகரி முதலிய இடங்களிலும் சமணத்திருமேனிகள் இருப்பது தமிழ்நாடரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் மூலம் தெரியவந்துள்ளது

விளாத்திகுளம் : கோவில்பட்டிக்குக் கிழக்கே அமைந்த இவ்வூர் ஆற்றங்கரையில் கிடைத்த ஒரு சிலை தமிழ்நாடரசு தொல்லியல் துறையால் சமணப் பெண் தெய்வமாகிய 'யக்சி அம்பிகா' என்று அறியப்பட்டுள்ளது. காலடியில்

குழந்தையுடன் நின்றநிலையில் காணப்பெறும் இந்த அழகிய உருவம் பிற்காலப் பாண்டியர் காலத்தின் கடைப்பகுதியைச் சார்ந்ததாகும்.

ஆழ்வார்திருநகரி : இவ்வூர்ச் சாவடிக்கு அருகே வாணம் தோண்டும் போது சமணத்தீர்த்தங்கரர் திருமேனி ஒன்று கிடைத்துள்ளது. இன்றும் இது இவ்வூர்ச் சாவடியில் காணப்படுகின்றது.

சமணப்பள்ளிகள்

ஊருக்குப் புறமாய் இருந்த மலைக்குன்றுகளின் இயற்கையான குகைத் தளங்களில் பள்ளிகளை அமைத்து சமணப்பெரியார்கள் அங்கே நோன்பிருந்தும் அருகனைத் தொழுதும் வாழ்ந்தார்கள். இவ்விடங்களை சமணப் பள்ளிகள் அல்லது அறவோர் பள்ளிகள் என்று அழைப்பது பொருத்தமுடையதாகும். இத்தகைய இடங்களில் தீர்த்தங்கரரின் உருவங்களை அக்குகைத்தளங்களின் பாறையின் மீது செதுக்கி வழிபட்டார்கள். இங்கே இருந்த சமணப் பெரியார்கள் மக்களுக்கும் அவர்களுக்குக் கீழிருந்த மாணவர்களுக்கும் அறமுரைத்து வாழ்ந்தார்கள். சித்தன்னவாசல், கருங்காலக்குடி, அழகர்மலை, ஆனைமலை, கீழவளவு, கழிஞ்சமலை, திருப்பரங்குன்றம், சமணமலை (நாகமலை அருகில் உள்ளது), கொங்கர்புளியங்குளம் உத்தமபாளையம், அய்யர்மலை, குப்பல்நத்தம், கழுகுமலை. எருவாடி முதலிய இடங்களில் முற்காலப்பாண்டியர் காலத்தில் சமண சமய அறவோர்கள் வாழ்ந் திருக்கின்றார்கள். அவர்களது பெயர்கள் அவர்கள் செய்வித்த திருமேனிகள், அவர்களது மாணுக்கர் பெயர்கள், ஒவ்வொரு பள்ளியிருந்த இடத்தில் வழங்கிய இறைவன் பெயர்கள், அவ்விறைவனுக்குச் செய்யப்பட்ட வழிபாடுகள், விடப் பெற்ற நிவந்தங்கள், பல்வேறு பகுதியைச் சார்ந்த மக்கள் இங்கு வந்து வழி பட்டமை ஆகிய செய்திகள் இப்பள்ளிகளில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக் களால் அறியக்கிடக்கின்றன. மக்களுக்கும் இப்பள்ளிகளில் வாழ்ந்த குறவர் களுக்கும் அதிகமான தொடர்பு இருந்தமையும் மக்கள் இவர்கள் வாழ்ந்த பள்ளி களை நாடி வந்தார்கள் என்பதையும் இங்குள்ள கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

சித்தன்னவாசல் : சித்தன்னவாசலில் ஏழடிப்பட்டம் என்றழைக்கப்படும் மலைப்பகுதியில் சமணப் பெரியார்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இங்குள்ள படுக்கை களில் 'தொழகுன்றத்துக் கடவுளன் திருநீலன், திருப்புரணன், திட்டைச்சாணன், திருச்சாத்தன், ஸ்ரீபூரணச்சந்திரன், நியத்தகரன், பட்டகாளி' என்று கி.பி. 4-5- ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் எழுத்துக்களில் இங்கு வாழ்ந்த சமணப் பெரியார் களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. முற்காலப்பாண்டியர் காலத்தில் இருந்த சமணப்பள்ளிகளில் இது பழமையானது. சம்பந்தருக்கு முந்தியது.

கருங்காலக்குடி : மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் இவ்வூர் உள்ளது. இங்குள்ள படுக்கைகளுக்கு மேல் முக்குடைப்பகவனின் உருவம் ஒன்றுள்ளது. இதனடியில் கி பி 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்தில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு அச்சணந்தி என்ற பெரியார் இதனைச் செய்வித்தமையைத் தெரிவிக்கின்றது

அழகர்மலை : அழகர்மலையில் தமிழிக் கல்வெட்டு பொறிக்கப்பெற்றுள்ள குகைத்தளத்தின் பகுதியில் புடைப்புச் சிற்பமாகத் தீர்த்தங்கரரின் உருவம் காணப்படுகின்றது. இதனைச் செய்வித்தவரும் முற்குறிப்பிடப் பெற்ற அச்சணந்திப் பெரியாரே ஆவார்.

ஆனைமலை : இம்மலையிலுள்ள நரசிங்கப்பெருமாள் குடைவரைக் கோயிலின் தென்புறத்திலுள்ள குகைத்தளத்தின் மேல்புறம் மகாவீரர், பார்சுவநாதர், பாகுபலி, இயக்கர், இயக்கி, முதலியோரது உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப் படுகின்றன. தென்கயவழிநாட்டுப் பெரும்பற்றூர் செழியபாண்டி, வெண்புரை நாட்டு வெண்புரை சாதன் ஆம்பிறையானலின சாதன் அரையன். வெண்பைக்குடி நாட்டு வெண்பைக்குடி வெட்டஞ்சேரி புதுமை எவ்வியம்பூதி, நரசிங்கமங்கலத்து திணைக்களத்தார், பொற்கோட்டுக் கரணத்தார், ஆகியோர் இங்குள்ள திருமேனி களைச் செய்வித்திருக்கின்றார்கள் என்று அறிகின்றோம்.

கீழவளவு : மேலூரிலிருந்து திருப்பத்தூர் செல்லும் வழியில் அமைந்துள்ள இவ்வூர்க் குன்றில் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள குகைத் தளத்தின் பக்கவாட்டில் பல சமண உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படு கின்றன. இவற்றில் ஒன்றைச் சங்கரன் ஸ்ரீ வல்லபன் செய்வித்தான்.

கழிஞ்சமலை : மேலூர் வட்டம் அரிட்டாபட்டிக்கு அருகில் அமைந்துள்ள இளமை நாயகிபுரத்திற்கு அருகில் இம்மலை இருக்கின்றது. இங்குள்ள ஆய்ச்சி மண்டபத்தின் அருகிலுள்ள பாறை மீது மகாவீரரின் புடைப்புச் சிற்பம் ஒன்று காணப்படுகின்றது. பொற்கோட்டுக் கரணத்தாரைச் சார்த்தி அச்சணந்திப் பெரியார் இதனைச் செய்வித்தார். இங்கிருந்த 'வாணிபக் குடியார்' இதனைக் காத்து நின்றார்கள். இம்மலையின் பழம்பெயர் திருப்பிணையன்மலை என்பது ஆகும் இச்செய்திகளை இங்குள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

திருப்பரங்குன்றம் : இம்மலையின் மீது தென் மேற்குப் பகுதி முகட்டிலுள்ள காசிவிஸ்வநாதர் கோயில் பகுதியில் பழங்காலத்தில் ஒரு சமணப்பள்ளி இருந்திருக்க வேண்டும். பாறையின் மீது பாகுபலியின் உருவம் ஒன்றும் பார்சுவநாதரின் உருவம் ஒன்றும் புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகின்றன. காசிவிஸ்வநாதர் கோயில் சுனைக் கருகில் பாறையில் புடைப்புச் சிற்பமாக இருந்த சமண உருவங்களும் கல்வெட்டுக் களும் பிற்காலத்தாரால் அழிக்கப்பெற்றிருக்க வேண்டும்.

சமணமலை : மதுரைக்கு மேற்கேயுள்ள சமணமலையில் செட்டிப்புடவு, பேச்சிப் பள்ளம், பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்ற குகைத் தளங்கள் ஆகிய பகுதிகளில் சமணமுனிவர்களும் மற்றவர்களும் செய்வித்த சமண தீர்த்தங்கரர்களி உருவங்களும் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. வெண்புநாட்டுக் குறண்டியைச் சேர்ந்த குணசேனதேவர் இப்பள்ளிக்குத் தலைவராக இருந்திருக் கின்றார். இதனை ''இப்பள்ளிவுடைய குணசேனதேவர்'' எனவும் ''இப்பள்ளி ஆள்கின்ற குணசேனதேவர்'' என்றும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இப்பள்ளியைச் சார்ந்திருந்த ஊர் நாட்டாற்றுப் புறத்து அமிர்த்தபராக்கிரம நல்லூரான உயிர்க்குடி எனவழைக்கப்பட்டது. இன்று இவ்வூர் குயில்குடி என்று அழைக்கப்படுகிறது அந்தலையான் களகுடிதன், அந்தலையான் மலைதன், அரையங் காவிதி கனகவீரப்பெரியடிகள் மகாணந்திப் பெரியார், அரிமண்டலம் படாரர், அபிநந்தனப்படாரர். குணசேனப் பெரியடிகள், தெய்வபலதெவன் குணவதி, புனட்டு நால்கூர் சடையப்பன் கனகநந்தி ஆகியோர் இங்குள்ள தீர்த்தங்கரர், இயக்கர், இயக்கி படிமங்களைச் செய்வித்திருக்கின்றனர்

கொங்கர் புளியங்குளம் : மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு அடுத்தமைந்துள்ள புளியங்குளம் குன்றில் சமணப்பெரியார்கள் வாழ்ந்த இயற்கையான குகைத்தளம் ஒன்று உள்ளது இக்குகைத் தளத்தின் கீழ்ப் பகுதியில் முக்குடை பகவனின் உருவம் ஒன்று பாறையில் புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகிறது. இதனைச்

செய்வித்த அச்சணந்திப் பெரியார் பெயர் இவ்வடிவத்தின் கீழே வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

உத்தமபாளையம்: இவ்வூருக்கு வடமேற்கேயுள்ள குன்றில் சமணப் பெரியார்கள் வாழ்ந்த பள்ளியும் அங்கு பாறை மீது வடிக்கப் பெற்ற இருபத்தோரு சமணத் தீர்த்தங்கரர் உருவங்களும் உள்ளன. இம்மலை 'திருக்குணகிரி' என்றும் இம்மலையின் இறைவன் பெயர் 'திருக்குணகிரிதேவர்' என்றும் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. சந்திரபிரபன் அரிட்டநேமிப் பெரியார் அச்சணந்தி, வாழைப்பட்டிசாலை கிச்சியார் ஆகியோர் இங்குள்ள படிமங்களைச் செய்வித்திருக்கின்றனர்.

அய்யம் பாளையம்: பழனி வட்டம் அய்யம்பாளையத்திற்கு அருகில் அய்யர்மலை அமைந்துள்ளது. இங்குள்ள இயற்கையான குகைத் தளங்களில் சமணப் பெரியார்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். குகைத்தளத்தின் மேல்புறம் பாறையில் தீர்த்தங்கரரின் திருமேனிகள் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. இவற்றை வடவள்ளி ஆரம்விச்சிவரதபாணி, அச்சணந்தி . . . . ருத்தமாணுக்கர், இந்திரசேனன், வெண்புனாட்டு நால்கூர் குடியன் மூவேந்தன் திருவரம்பலத்தில் ப . . மூலத்தான் ஆரி, விரசங்கத்துப் பெருமடை மல்லிசேனப் பெரியார், கெழுவத்து வெண்புகவிரிச்சி நாகன் காடன் . . . அவ்வணந்திக் குரத்தியார் காழகத்துச் சாந்தி வீரக் குரவடிகள் ஆகியோர் செய்வித்திருக்கின்றனர், இங்குள்ள கல்வெட்டில் இறைவன் 'ஸ்ரீஅயிரைமலைத் தேவர்' என்று அழைக்கப் பெறுகின்றார்.

குப்பல்நத்தம்: மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்திலுள்ள குப்பல் நத்தம் கிராமத்து பொய்கை மலைக்குன்றில் சமணத் தீர்த்தங்கரரின் திருமேனிகள் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றைச் செய்வித்தோர் பெயர்கள் மிகவும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இவ்விடம் அறவோர் பள்ளியாக விளங்கியிருக்க வேண்டும்.

கழுகுமலை: கோயில்பட்டியிலிருந்து சங்கரன்கோயில் செல்லும் வழியில் இம்மலை அமைந்துள்ளது. பாண்டிநாட்டில் இருந்த சமண அறவோர் பள்ளிகளில் இதுவே பெரியதாகவும் சிறப்புடையதாகவும் இருந்திருக்க வேண்டும். இங்கே நூற்றுக்கணக்கான சமணத் தீர்த்தங்கரர் உருவங்களும், இயக்கர், இயக்கி, உருவங்களும் பாறையில் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. பாண்டிய நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் சாதாரண மக்கள் முதல் சிற்றரசர் வரை, சமணப் பெரியார்கள் தொட்டு மாணுக்கர் வரை படிமங்களைச் செய்வித்திருக்கின்றனர். இம்மலை இறைவர் திருமலை மேற்படாரர் அரைமலை ஆழ்வார் என்றும் கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றார். இவ்வூர் திருநேச்சுறம் பெருநேச்சுறம் இளநேச்சுறம் என்றும் இம்மலை திருமலை அரைமலை என்றும் குறிப்பிடப்படுகின்றது

எருவாடி: திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்தில் இவ்வூர் உள்ளது. இவ்வூரின் இரட்டைப் பொத்தல் பாறையில் சமணத் தீர்த்தங்கரரின் திருமேனிகள் காணப்படுகின்றன. அவற்றைச் செய்வித்தோராக அச்சணந்தியும், நாட்டாற்றுப் போக்குச் சபையாரும் குறிக்கப்பெறுகின்றனர். இம்மலைமேல் இருக்கும் இறைவன் பெயர் 'நாட்டாற்றுப் போக்கு திருவிருத்தலை அருவாளத்துப் படாரர்' என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமணப்பள்ளிகளின் காலம்: இப்பள்ளிகள் உள்ள இடங்களில் எல்லாவற்றிலும் பாண்டிய மன்னர்களின் ஆட்சியாண்டு பொறித்த கல்வெட்டுக்கள்

இல்லை. சில இடங்களில் மட்டுமே உள்ளன. அவை அப்பள்ளிகளின் காலத்தைக் கணிக்க துணைபுரிகின்றது. எருவாடி, அய்யம்பாளையம், கழுகுமலை முதலிய இடங்களில் முற்காலப் பாண்டிய அரசர்களின் ஆட்சியாண்டு பொறித்த கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கழுகுமலையில் கோமாறஞ்சடையனின் . . ? மூன்றும் ஆட்சியாண்டு கல்வெட்டுக்கள் இரண்டும் பராந்தக வீரநாராயணனின் இருபத்தைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், எருவாடியில் பராந்தகநெடுஞ்சடையனின் 43-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் அய்யம்பாளையத்தில் வரகுணபாண்டியனின் சக ஆண்டு 792-டோடு (கி. பி. 870) ஒத்த அவனது எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் காணப்படுகின்றன. எனவே இப்பள்ளிகள் எழுந்த காலம் எட்டு ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையாக இருக்க முடியாது.

எருவாடி அய்யம்பாளையம் முதலிய இடங்களில் அச்சணந்தி என்ற சமணப் பெரியார் தீர்த்தங்கரர் திருமேனிகளைச் செய்வித்ததாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. எருவாடி கல்வெட்டு கோமாறஞ்சடையனின் 43-ஆவது ஆட்சியாண்டைச் சார்ந்தது (கி. பி. 808). அய்யம்பாளையம் கல்வெட்டு வரகுணனின் எட்டாம் ஆட்சியாண்டைச் (கி பி. 870) சார்ந்தது. எனவே இப்பெரியார் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை வாழ்ந்த பெரியாராக இருக்கவேண்டும். மேலும் ஆனைமலையிலுள்ள நரசிங்கப்பெருமாள் குடைவரை பராந்தகநெடுஞ்சடையனின் காலத்தில் கி பி. 771-இல் எடுக்கப்பட்டது. இதனால் இது இருந்த பகுதிக்கு அப்பெருமாள் பெயரால் நரசிங்கமங்கலம் என்று பெயர் ஏற்பட்டது. இதற்கு முன் இப்பெயர் இவ்வூருக்கு இல்லை. இவ்வூரில் அச்சணந்தி செய்வித்த தீர்த்தங்கரர் திருமேனியை நரசிங்கமங்கலத்துச் சபையார் காத்து நின்றமையைத் தெரிவிப்பதால் இப்பகுதிக்கு நரசிங்கமங்கலம் என்ற பெயர் ஏற்பட்ட பிறகு ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பராந்தகநெடுஞ்சடையனின் ஆட்சி காலத்தின் இறுதியிலிருந்து வாழ்ந்தவர் என்பது உறுதிப்படுகின்றது. மேலும் ஆய் அரசன் விக்கிரமாதித்திய வரகுணன் வரகுணபாண்டியனின் (கி. பி. 862-905) சமகாலத்தவன் ஆவான். திருச்சாரத்து மலையில் (சிதறல்) இவனது 28-ஆம் ஆட்சி ஆண்டில் முத்து(வ்வாள) நாரணகுட்டியார் அருகனுக்கு குடைவரைக் கோயில் ஒன்றை எடுத்தார். இக்குடைவரையின் அருகிலுள்ள பாறையில் அக்குடைவரையின் காலத்தினைச் சேர்ந்த தீர்த்தங்கரர் திருமேனிகள், இயக்கர் இயக்கி படிமங்கள், பாகுபலியின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. அவற்றைச் செய்வித்தோர்களில் ஒருவராக விக்கிரமாதித்திய வரகுணனும், அச்சணந்தியும் குறிப்பிடப்படுகின்றனர். இதனால் வரகுண விக்கிரமாதித்தியன் காலத்தில் 9-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் அச்சணந்திப் பெரியார் வாழ்ந்திருக்கின்றார் என்பது உறுதிப்படுகின்றது.

இவ்வச்சணந்திப் பெரியார் செய்வித்த தீர்த்தங்கரர் திருமேனிகள் கருங்காலக்குடி, அழகர்மலை ஆனைமலை, கழிஞ்சமலை. கொங்கர்புளியங்குளம் உத்தமபாளையம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன இவரது தாயார் குணவதியார் சமணமலையில் ஒரு திருமேனியைச் செய்வித்திருக்கின்றார் எனவே இப்பள்ளிகள் எழுந்த காலம் இவர் வாழ்ந்த காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட வையாக இருக்க முடியாது. மேலும் அச்சணந்தி ஒருவரா? இருவரா? என்ற ஐயத்திற்கு இடமில்லை. ஏனென்றால் அச்சணந்தி என்ற பெயர் பொறித்த கல்வெட்டுக்கள் எல்லாம் 9-ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதியைக் கொண்டவையாக இருக்கின்றன. குப்பல்நத்தம், கீழவளவு முதலிய இடங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் அமைதியைக் கொண்டு அவையும் மேற்கண்ட பள்ளிகளின் சமகாலத்தவையாக இருத்தல் வேண்டும் எனலாம். இவற்றையெல்லாம்

கொண்டு இச்சமணப்பள்ளிகள் (சித்தன்னவாசல் நீங்கலாக) பாண்டிய நாட்டில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி ஒன்பது பத்தாம் நூற்றாண்டு களில் சிறப்புடன் விளங்கியிருக்க வேண்டும் எனலாம்.

சிற்பங்களின் தோற்றம்: சமணப்பள்ளிகளில் காணப்பெறும் சிற்பங்கள் குறிக்கோள்கள் பலவற்றுடன் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. வழிபாட்டிற்கு மட்டும் என்ற எண்ணத்திற்காகவும், மகன் இறந்துபட்ட தன் தாயாரின் நினைவாகவும், தந்தையாரின் நினைவாகவும், தந்தை மகனது நினைவாகவும், மாணாக்கர் ஆசியரின் நினைவாகவும், சதாரண மக்கள் சமணப் பெரியாரின் நினைவாகவும், உறவினர் இறந்து பட்ட அவரது உறவினரின் நினைவாகவும், பொது மக்கள் நன்மைக்காக ஊர்ச்சபையும், கரணத்தாரும் திணைக்களத்தாரும் செய்வித் தனவாக இச்சிற்பங்களின் அடியில் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன.

காவல்: நாகமலைக்கருகிலுள்ள சமணமலையில இத்திருமேனிகளைக் காப்பதற்காக இதனைச் செய்வித்தவர்கள் உயிர்க்குடி ஊரால் பெயராலும், நாட்டார் பெயராலும் செய்வித்திருக்கின்றனர். இவ்வறச்செயல்களைப் பல்வேறு பிரிவினர் காத்து நின்றனர். கழிஞ்சமலையில் 'வாணியக்குடி' மக்கள் காத்து நின்றனர். ஆனைமலையில் நரசிங்கமங்கலத்துச் சபையாரும் பொற்கோட்டுக் கரணத்தாரும், திணைக்களத்தாரும் எருவாடியில் நாட்டாற்றுப்போக்கு சபை யாரும் காத்து நின்றனர். கழுகுமலையில் திருமலைவீரர் என்ற பெயரிலும் பராந்தக வீரர் என்ற பெயரிலும், அறக்கொடைகளைக் காப்பதற்கு பாண்டிய மன்னனது படை வீரர்கள் இருந்தனர். சமணசமய அறங்களைக் காப்பதற்கென்று இருந்தவர்களைப் 'பள்ளிச்சிவிகையார்' என்று சமணமலைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. உத்தம பாளையம் கல்வெட்டில் 'அறம் வேண்டுவாரிது பிழையாமை செய்க' என்ற ஓம்படைக்கிளவியும் காணப்படுகின்றது.

படிமங்கள்: எல்லாப்பள்ளிகளிலும் தீர்த்தங்கரர் உருவங்களைச் செய்வித் தமையைச் செயல் என்றும் தன்மம் என்றும் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. உருவத்தை திருமேனி என்றும் பேரம் என்றும் தேவர் என்றும் குறிப்பிடுகின்றன. பொதுவாக எல்லா வகையான சமண உருவங்களையும் திருமேனி, படிமம், என்றே குறிப்பிடும் வழக்கம் காணப்படுகின்றது. சில இடங்களில் மட்டும் அவற்றிற்குரிய சிறப்புப்பெயர் குறிக்கப்பெற்றிருக்கின்றன. அய்யம்பாளையம் கல்வெட்டுக்கள் பஸ்வபடாரர் என்றும் பாரிஸ்வபடாரர் என்றும் சமணதீர்த்தங்கரராகிய பார்சுவ நாதர் பெயரைக் குறிப்பிடுகின்றன. அங்கேயே அதற்கு அருகில் இயக்கி அவ்வைகளையும் செய்வித்தமையையும் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இதனால் சமண சமயப் பெண் தெய்வங்களும் 'இயக்கி அவ்வை' என்ற பெயர்கள் இருந்தமை தெளிவாகின்றது. முக்குடைநாதர் திருமேனிக்கு இருபக்கமும் சாமரம் ஏந்திய நிலையில் காணப்படும் ஆண் உருவங்களைக் 'கால பேரம் இரண்டு' என்று கழுகுமலைக் கல்வெட்டும், பரிவாரப்புரவு வாரியார் பேரம் என்று ஆனைமலைக் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன. ஆனைமலையில் சமணப்பெண் தெய்வமான பத்மாவ தியின் அடியில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு அவளை 'இயக்கர் பதுமம்' என்று குறிப்பிடுகின்றது. இச்சமணப் பள்ளிகளில் பொதுவாக இயக்கர்க ளோடுகூடிய முக்குடைநாதர் உருவங்களும், ஏந்திய அரவுக்குடையுடைய பார்சுவ நாதரின் உருவமும் இருபுறமும் அழகிய அணங்குகள் நிற்கும் பாகுபலியின் உருவங் களும் தனியே குழந்தையுடன் நிற்கும் யக்சியின் உருவமும் காணப்படுகின்றன.

வழிபாடும் நிவந்தங்களும்: சைவ வைணவ கோயில்களில் நடைபெற்றது போன்று சமண அறவோர் பள்ளிகளிலும் வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. நிவந்தங்கள் அளிக்கப் பெற்றுள்ளன.

உத்தமபாளையம் சமணப்பள்ளி குணகிரிதேவர்க்குத் திருவிளக்குக்கு அனந்த வீர அடிகளால் பதினொருகாசுகள் கொடுக்கப்பட்டன. அய்யம்பாளையம் அயிரை மலைத்தேவர்க்கு இரண்டு கலம் நெல் திருவிளக்குக்காகக் கொடுக்கப் பெற்றது. கரைசானநாட்டு இரம்பாட்டு வேளான் சாத்தன் (எருவாடி) திருவிருத்தலை அருவாளத்துப் படாரர்க்குத் திருவிளக்கிற்காக ஐம்பது ஆடுகள் அளித்திருக்கின்றான். திருநேச்சுறத்து திருமலை மேலுள்ள படாரர்க்கு களக்குடிமங்கலத்துச் சேரி சாத்தங்காரி நொந்தாவிளக்கு ஒன்று எரித்திருக்கின்றான். மேலும் சமணப் பள்ளிகளிலிருந்த தீர்த்தங்கரர் திருமேனிகளில் சிலவற்றிற்கென்று தனியே திருவிளக்கு எரிக்கப்பட்டிருக்கின்றது. திருநேச்சுறத்தில் திருச்சுரியல் பிராமணன் மாளி சங்கரநாராயணன் என்பவன் நகரத்தான் செய்வித்த தேவர்க்கு மூன்று சந்தியும் திருவிளக்கு எரிப்பதற்காக திருநேச்சுறத்து பேரூரார் கையில் இரண்டு கழஞ்சு பொன் கொடுத்திருக்கின்றான். திருநேச்சுறத்து மாறம்புல்லி செய்வித்த படிமத்திற்கு கீழூரன்றெட்டந் திருவிளக்கு ஒன்று எரித்திருக்கின்றான்.

குவணச்சேரிதட்டார் காவிதிவட்டம்வடுகி அயிரைமலைத்தேவர்க்கு அவிப் புறமாக இருகழஞ்சு பொன் அளித்திருக்கின்றான். திருவயிரைப் பார்சுவப் படாரர்க்கும் இயக்கி அவ்வைகளுக்கும் அவிப்புறமாக காழகத்துச் சாந்திவீரக் குரவடிகள் ஐந்நூறு காணம் பொன் அளித்திருக்கின்றார். சீலன்காவினியானைத் தென்னன் என்பவன் திருநேச்சுறத்து அரைமலை ஆழ்வார்க்கு நித்த அபிஷேகத் திற்கும் திருஅமுதுக்கும் நிலமளித்திருக்கின்றான்.

எருவாடி திருவிருத்தலைப் படாரர்க்குப் பள்ளிச்சந்தமாகக் கரைசானநாட்டு இரம்பாட்டு வேளான் சாத்தன் என்பவன் பள்ளி ஸ்ரீகாரியங்கள் முதலியன நிறைவேற்றுதற்காக இருபத்திரண்டு செய்தடி நிலம் அளித்தான். இச்சமண அறவோர் பள்ளிகளில் பூசை முதலிய காரியங்கள் செய்யப் பட்டன் ஒருவன் இருந்தான் என்பது கழுகுமலைக் கல்வெட்டால் அறிய முடிகிறது திருநேச்சுறத்து அரைமலை ஆழ்வார்க்குத் திருப்பணி செய்கிற பட்டனுக நெற்சுறநாட்டுப் பெருங் கொல்லன் சுந்தரன் என்பவன் இருந்திருக்கின்றான். இவனுக்குக் கால் அளவு கருஞ்செய் விடப்பட்டது.


சமணப் பள்ளியில் சமண சித்தாந்தம் : சமணப்பள்ளிகளில் சமண சித்தாந்தம் எல்லோருக்கும் எடுத்துரைக்கப்பட்டது கழுகுமலையில் இதற்காக இரண்டு நிவந்தங்கள் விடப்பட்டுள்ளன. சித்தாந்தம் எடுத்துரைக்கும் இடத் திற்குத் தனியே பெயர் வைக்கப்பட்டிருந்தது. அவற்றிலிருந்து சமண சித்தாந்தம் அறிந்தோர் அதை எடுத்துரைத்தனர். அவர்கள் வயிராக்கியர் எனப்பட்ட னர். குணசாகரப்படாரர் செய்வித்த குழுவாணை நல்லூர் தும்பூர் கூற்றத்துக் காடந் தைக் குடி தர்மவித்தனுநாந . . . . யாமளர் திருமாலடைஞ்சிலிருந்து சித்தாந்தம் உரைக்கும் வயிராக்கியர் பதின்மர்க்கு ஆகாரதானம் அளிக்கப் பெற்றது. பெருநாவலூர் . . . . தாஸநாகிய மாதேவனக்கன் . . . ஞ்சிலிருந்து சித்தாந்தம் உரைக்கும் வயிராக்கியர் ஐவர்க்கு ஆகாரதானம் அளிக்கப்பெற்றது. இவை திருச்சி மாவட்டம் திருவெள்ளறை சிவன் கோயிலில் முதல் ஆதித்தன் காலத்தில் வேதம் உரைப்பதற்காக வேதம் வல்ல பிராமணர்க்கு அன்னதானம் அளிக்கப்பட்டதை நமக்கு நினைவூட்டுகின்றது.

சமண அறவோர்கள் : இப்பள்ளிகளில் ஆசிரியர் அவரது மாணக்கர் என்று வழி வழியாகச் சமணப்பெரியார்கள் வாழ்ந்து வந்திருப்பதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் பெண்களும் இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். சமணசமய ஆசிரியர்களும் சான்றோர்களும் படாரர், பண்டிதர்,

பெரியார், பெரியடிகள், பெரியான், அடிகள், குரவர், குரவடிகள் என்றும் பெண்களாய் இருந்தால் குரத்தியார், குரத்திகள் என்றும் அடைமொழிகள் கொடுத்து அழைக்கப்பெற்றனர். மாணுக்கர், மாணுக்கி, மாணுக்கியார், சீடன், சட்டன் என்று இவர்களது மாணவர்கள் அழைக்கப்பட்டனர்.

உத்தமபாளையத்திலும், சமணமலையிலும் எட்டு நாட்கள் உண்ணு நோன்பிருந்து உண்ணும் பெரியார்கள் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் அஷ்டஉபவாசி படாரர் என்றும் அட்டோபவாசி கனகவீரர் என்றும் சிறப்புப் பெயர் கொடுத்து அழைக்கப்பட்டனர். சமணமலையில் வழிவழியாக சமணப் பெரியார்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகின்றது. குறண்டி அஷ்டஉபவாசிபடாரர் மாணுக்கர் குணசேனதேவர், கொணந்திப்பெரியார் என்ற இருவர் ஆவார்கள். இதில் குணசேனதேவரின் மாணுக்கர் வர்த்தமானப்பண்டிதர் தெய்வபலதேவன், அந்தலையான் களக்குடிதன், அந்தலையான் மலைதன், அரையன் காவிதி சங்கணம்பி, கனகவீரப் பெரியடிகள் என்ற அறுவர் ஆவார்கள். இவர்களில் ஒருவரான வர்த்தமான பெரியடிகளின் மாணுக்கர் குணசேனப் பெரியடிகள் ஆவார். இவர்கள் அனைவரும் சமணமலையில் வழிவழியாகத் தங்கி வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இவ்வாறே மற்ற பள்ளிகளில் பலவற்றில் சமணப்பெரியார்களின் வழிமுறை குறிக்கப்பெற்றிருக்கின்றது.

ஆண்களிடத்தில் பெண்கள் மாணுக்கியராயும், பெண்களிடத்தில் ஆண்கள் மாணுக்கராயும் இருந்ததை இச்சமண சமயப்பள்ளி கல்வெட்டுக்கள் காட்டுவது நம்மை அக்காலத்தில் சமண சமயம் பாண்டிய நாட்டில் பெண்களுக்கு அளித்திருந்த இடத்தையும், பெருமையையும் அறியச் செய்கின்றது. நேமிபடாரர் மாணுக்கி நால்கூர்குரத்திகள் என்றும் நால்கூர்குரத்திகள் மாணுக்கர் நாட்டிகப் படாரர் என்றும் கழுகுமலைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. மேலும் இப்பள்ளிகளில் வாழ்ந்த கூடற்குரத்தியார், சிரிவிசையக்குரத்திகள், மிழலூர் குரத்திகள், திருமலைக் குரத்திகள், மம்மைக்குரத்திகள், அவ்வணந்திக்குறத்திகள் என்ற பெண்பாற் சமய அறவோர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளனர்.



கன்னடச் சக்கிலியர் பற்றிய சில செய்திகள்

சொ. சாந்தலிங்கம், எம். ஏ.,

கரூரிலிருந்து குஜிலியம்பாறை வழியாகத் திண்டுக்கல் செல்லும் தடத்தில் சுமார் 15 கி. மீ. தொலைவில் செல்லாண்டிபட்டி என்னும் கிராமம் உள்ளது. இங்கிருந்து இரண்டு கி. மீ. கால் நடையாகச் சென்றால் குமாரபாளையம் என்னும் சிற்றூரை அடையலாம்.

இவ்வூரில் கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்ட சுமார் 12 சக்கிலியர் குடும்பங்கள் வாழ்கின்றனர். இச்சக்கிலியர்கள் தங்களில் 9 குலங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். அவர்கள் அறிந்தவரையில் இவ்வளவே. இதற்கு மேலும் உண்டு என்பர் அவர்கள். அவர்கள் அறிந்த குலங்கள் 9.

1	போத்தனு	— பிற எண் குலங்களுக்கு மாமன் முறை
2	கேமனு	— சகோதரர்கள் or பங்காளிகள்
3	சோழனு	
4	கொம்மீனு	
5	காமனு	
6	எதுப்புனு	— சகோதரர்கள் or பங்காளிகள்
7	கேட்னு	
8	கஸ்பனு	
9	சூனு	

இவர்கள் தங்களுடைய சகோதர குலத்தினருடன் மண உறவு வைத்துக் கொள்வதில்லை. போத்தனு என்ற குலத்தைச் சேர்ந்தவர்கள் பிற எட்டு குலங்களிலும் மண உறவு கொண்டுள்ளனர்.

இவர்கள் தாங்கள் நேரடியாக இறைவனால் படைக்கப் பட்டவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். மக்கள் அனைவரும் ஈஸ்வரனிடம் சென்று கிணற்றிலிருந்து நீரை மேலே கொண்டுவர வழி தெரியவில்லை, அதற்குத் தாங்கள் வகை செய்ய வேண்டும் என்று வேண்ட, அதற்கென இறைவன் சக்கிலியச் சாதியைப் படைத்தான் என்பது இவர்கள் கருத்து.

ஈஸ்வரனும், மனைவியும் ஒரு நாள் நடந்து செல்லுகையில், வழியில் களைப்பு மேலிடவே அருகில் இருந்த நிழலில் தங்கினர். அங்கு வன்னியும், தென்னையும் சேர்ந்து நிழல் கொடுத்துக் கொண்டிருந்தன. இறைவன் தன் நெற்றி வியர்வையைச் சுண்டி விட அது மரத்தின் மீது பட்டு, அதிலிருந்து ஒருவன் தங்க உளி, கத்தி, ஊசி, நூல் முதலிய ஆயுதங்களுடன் தோன்றி

ஞன். அவனே சக்கிலியன் எனப் பெயர் பெற்ருன். இவனைக் கொண்டு பரிசல் கட்டிக் கிணற்றுத் தண்ணீர் எடுக்கவும், செருப்புத்தைக்கவும் பயன் படுத்திக் கொள்ளும்படி மக்களை இறைவன் பணித்தார் என்பர். இவர் களுக்கென்று மக்களின் விளைச்சலில் வருமானத்தில் ஒரு பங்கு மானியம் வழங்கவேண்டும் என்பதும் இறைவனின் ஆணை என்கிருர்கள்.

இவர்களில் ஐந்து பிரிவினர் இவர்கள் அறிந்த வரையில் உள்ளனர். இதற்கு மேலும் பிரிவுகள் உண்டு.

1 கொய்ய சக்கிலி
2 மொரச சக்கிலி
3 ரெட்டி சக்கிலி
4 கொல்ல சக்கிலி
5 அனுப்ப சக்கிலி

வழக்கிலுள்ள சில சடங்குகள்

குழந்தை பிறப்பு: தூலேச்சன் குழந்தை பிறப்புக்குக் கருவுற்ற பெண் தன் தாய் வீட்டிற்கு வருகிருள். அவள் மகவு பெற்றெடுத்ததும் அவளுக்கு வெல்லம், சுக்கு, மிளகு, வெள்ளைப் பூண்டு முதலியவற்றை அரைத்து உண்ணக் கொடுப்பர். அரிசிச் சோறு, ரசம், திப்பிலி, தேசவரை முதலியவை போட்டு உணவு தயார் செய்து கொடுப்பர். மூன்ரும் நாள் தாய்க்கும், சேய்க்கும் நீர் ஊற்றல் (குளித்தல்) நிகழும். குழந்தை அழாமல் இருந்தால் அதற்கு நெற்றியிலும், மார்பிலும் சூடு போடுதல் உண்டு. குழந்தை பெற வந்த பெண் மூன்று மாதம் தன் தாய் வீட்டில் தங்குவது உண்டு.

இம்மூன்று மாத காலத்தில் எப்போதாவது குழந்தையின் தந்தை வீட்டார் கோழி, எண்ணெய், அரிசி, முதலிய பொருட்களுடன் வந்து பார்த்துச் செல்வர். பின் குழந்தையை அழைத்துப்போக வரும்போது பெண் வீட்டார் அவர்களுக்குக் கோழிக்கறி உணவளித்துத் தாயையும், சேயையும் அனுப்பி வைப்பர். இதற்கு ஆக்கிப் போடுதல் என்று பெயர் குழந்தை பிறந்த மூன்ரும் நாளே அரைஞாண்கயிறு போடுதல் உண்டு.

கருவுற்ற பெண்ணுக்கு 5-ஆம் மாதம் அல்லது 7-ஆம் மாதம் வளைகாப்பு நிகழும். 9-ஆம் மாதம் தாய் வீட்டிற்கு அழைத்துச்செல்லப் படுவாள்.

குழந்தைக்கு முடியிறக்குதல் 1 முதல் 5 வயதுக்குள் நடக்கும். முருகன் கோயிலிலேயே பெரும்பாலும் முடியிறக்கப்படும். அப்போது தாய்மாமன் காது குத்துவான். மொய் வாங்கப்படும். சுற்றத்தார்க்கு உணவு போடப்படும். முருகன் கோவில் தவிர மதுரை வீரசுவாமி,

கருப்பணசாமி, மலையாள தெய்வம், காளியம்மன், மாரியம்மன், அங்காயி, கதறம்மாள் போன்ற சிறு குலதெய்வக் கோயில்களிலும் முடியிறக் குதல் உண்டு.

பெயரிடுதல் : குழந்தைக்கு 3 மாதத்திற்குள் பெயரிடுவர். அதில் எவ்விதக் குறிப்பிடத்தக்க சடங்கும் இல்லை. ஆண் குழந்தைக்கு ஆறுமுகம், கந்தன், முருகன், பெருமாள், மலையாளன். மருதன். ராமன், லட்சுமணன் என்றும், பெண் குழந்தைகளுக்குக் காளியம்மா, செல்லம்மா, அங்காயி, கருப்பாயி, லட்சுமி, பாலாயி, பெருமாயி, அங்கம்மா என்றும் பெயரிடுவர். ஆறுவது பிறக்கும் குழந்தை ஆறுமுகம் அல்லது ஆறுயி எனப் பெயர் பெறும். ஐந்தாவது பெண் குழந்தை பிறந்தால் அதற்கு அஞ்சலம்மாள் என்று பெயரிடப்பெறும். முதல் இரண்டு குழந்தைகள் பிறந்து, இறந்து விட்டால், மூன்றுவது பிறந்த குழந்தைக்கு மூக்குக் குத்துவர். ஆண் குழந்தைக்கு (3வதுக்கு) பிச்சைக்காரன் என்றும், பெண் குழர்தைக்கு மூக்காயி என்றும் பெயரிடுவர். இவை தவிர பாட்டன் பெயர்களும் மூதாதையர் பெயர்களும் இடுவதும் உண்டு. குழந்தைகளுக்குச் சாதகம் எழுதும் வழக்கம் உண்டு. குழந்தைக்கு உணவு கொடுத்தல், பள்ளிக்கு அனுப்புதல் என்பதில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஏதும் இல்லை.

பருவம் அடைதல் : பெண் பருவம் அடைந்ததும் சுற்றத்தார் அனைவரும் வருவர். பெண்ணுக்குத் தண்ணீர் ஊற்றுவர். மஞ்சள் நீர் ஊற்றுவர். அரிசிமாவு இடித்து வெல்லம் கலந்து அனைவருக்கும் கொடுப்பர். பழம், சர்க்கரை முதலியவையும் கொடுப்பர். பெண்ணுக்கு முட்டை, பால் முதலியவை கொடுப்பர். அன்றே பெண்ணின் தாய்மாமன் வந்து கம்பந்தட்டால் குடிசை கட்டுவார். குடிசையில் வேப்பங்கொழுந்து செருகி, மேலே இலந்தைமுள் வைப்பர். காத்து, கருப்பு அண்டா திருக்கவும், பருந்து அமராமல் இருக்கவும் இதைச் செய்வர். 7, 9 அல்லது 12 நாட்கள் வரை இக்குடிசைக்குள்ளேயே பெண் இருக்க வேண்டும். மாமன் வீட்டார் பெண்ணுக்கு வேண்டிய சேலை, துணி, கண்ணாடி, சீப்பு பிற அழகுப் பொருட்கள் முதலியவற்றைக் கொண்டுவந்து கொடுப் பர். இது இங்கு சமுத்திரம், தொட்டி, சடங்கு என்ற பெயர்களில் வழங்கு கிறது. பெரும்பாலும் பெண் பருவமடைந்த இரண்டாண்டு காலத்திற்குள் திருமணம் நிகழும்.

திருமணம்

முன்பு பெரியோர்களே பெண் பார்த்து நிச்சயிப்பது உண்டு. இப்போது பெண் மாப்பிள்ளை இருவரும் நேரிலேயே பார்த்து உறுதி செய்து கொள்கின்றனர். மாப்பிள்ளை பெண்ணுக்குப் பரிசுப் பணம் ரூ 12-25 கொடுக்கவேண்டும். இது பரியம் எனப்படும். 5 அல்லது 6 வல்லம் அரிசி (4 படி = 1 வல்லம்) மாப்பிள்ளை, பெண் வீட்டிற்குக் கொடுப்பார். முடிந்தால் நகைக்கென்று ரூ. 200 வரை கொடுப்பார்.

திருமணம் மாப்பிள்ளை வீட்டிலேயே நடக்கும். தப்பு, உருமி, நையாண்டி மேளம் அடித்து மாப்பிள்ளையை அழைத்து வருவர். பரிசம் போடும் நாளில் பருப்பஞ்சோறு போடப்படும். தாலி கட்டும் போது பெண்ணின் தாய்மாமன் பெண்ணையும், மாப்பிள்ளையின் தாய்மாமன் மாப்பிள்ளையையும் மடியில் உட்கார வைத்துக் கொள்வர்.

தலைமுடியைக் கயிருகத் திரித்து அதில் மஞ்சளைக் கட்டி கையில் கங்கணமாகக் கட்டிக் கொள்வர். மணம் முடிந்து மறுவீடு செல்வர். அது 'மதவை' என்று அழைக்கப்படுகிறது.

மரணச்சடங்கு: இறந்தவர் உடலை உட்கார வைத்து, பங்காளியை அழைத்து வந்து தேங்காய் உடைக்கச் செய்வர். கருப்புக் கட்டி வட்டு, *1* படி நெல் முதலியவைற்றை முன்னுல் வைப்பர். ஊதுபத்தி, விளக்கெண்ணெ விளக்கு முதலியவை எரிப்பர். வாய்க்கட்டு, பெருவிரல் கட்டு முதலியவை உண்டு. பின் எல்லோரும் சேர்ந்து ஒப்பாரி வைப்பர். இதற்கு எளவு கட்டுதல் என்று பெயர்.

7-ஆம் நாள் சாஸ்திரம் நடைபெறும். அன்று ஒரு குவளையில் பால் கொண்டு சென்று குழியில் தெளிப்பர். இறந்தவன் மகனுக்கு மொட்டையடிப்பர். பின் மூன்று பிரிவுகளுடைய (முக்கவர்) அரளிக் குச்சியில் முக்காடு போட்டு வைத்து அதன் எதிரே தேங்காய் உடைத்து வைத்து, அதையும் மந்தையில் புதைத்து, தண்ணீர் ஊற்றி, மண் போட்டு மூடிவிட்டு வீட்டிற்கு வருவர். மாமன், மைத்துனர்கள் வேட்டி கொடுப்பர். இதற்கு உருமால் கட்டுதல் என்பர்.

மறுநாள் காலை கோழிக்கறி சமைப்பர். வீட்டின் கூரையில் சோறு இரைப்பர். காகம் அதைச் சாப்பிடும். இதிலிருந்து தாம் வணங்கும் தெய்வம் நேர்மையானது என்று அறிவர். சாத்திரத்தன்று இறந்தவரின் மகனுக்கு எண்ணெய், அரப்புத் தேய்த்து, மாமன், மைத்துனனை நீர் ஊற்றச் சொல்லிக் குளிப்பாட்டுவர். கடைசிமகன் தந்தைக்கும், தலைமகன் தாய்க்கும் மொட்டையடிக்க வேண்டும்.

பொதுவான பழக்கங்கள்: இச்சமூகத்தில் எகடன், கோலுக்காரன் என்பவர்கள் பெரியதனக்காரர்கள். இவர்களை முன்வைத்தே எல்லா இல்லவைபவங்களும் நடக்கும். சாதிக்கட்டுப்பாடு உண்டு. தம்மை விடத் தாழ்ந்தவர் வீட்டில் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டால் சாதிப்பிரஷ்டம் செய்யப்படும். அவர் திரும்பவும் தன் சாதிக்கு வர வேண்டுமென்றுல் காவிரி நீர் கொணர்ந்து அவர் மேல் தெளித்து, பின் சேர்த்துக் கொள்வர். பறையன், குறவன், முஸ்லிம் வீடுகளில் இவர்கள் சாப்பிடக் கூடாது.

ஹேமசந்திரரின் தேசீநாமமாலாவில் உள்ள திராவிடச் சொற்கள்

சாரதா சீனுவாசன்

'தேசீநாமமாலா' என்கிற பிராகிருதநூல், ஆசார்ய ஹேமசந்திரசூரி (கி.பி. 1088-1172)யால் எழுதப்பட்டது. கூர்ஜா தேசத்தில் அதாவது தற்கால குஜராத்தில் முக்கிய அரசர்களாக இருந்த ஜயசிம்மசித்தராஜன், குமாரபாலன் இருவருடைய சபையை அலங்கரித்த இந்த ஜைனசூரி அனேக நூல்களை எழுதியிருக்கிறார். 'ஸித்தஹேமா' என்னும் சமஸ்கிருத வியாகரணம், 'காவ்யானுசாஸனம்' எனப்படும் அலங்கார சாஸ்திரம் 'அரஹந்நீதி' எனப்படும் அரசதர்மநூல், 'அபிதான சிந்தாமணி' எனப்படும் பேரகராதி என்னும் நூல்களை எழுதியிருக்கிறார்.[1]

இந்நூலைக் கண்டெடுத்த டாக்டர். ப்யூலர்[2] இதை தேசீசப்தஸங்க்ரஹ என்றும், டாக்டர். பிஸ்சல்[3] 'தேசீநாமமாலா' என்றும் அழைத்துள்ளார். ஹேமசந்திரர்,[4] கடைசி செய்யுளில் 'ரயணுவளி' அதாவது 'ரத்னுவளி' என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்பிராகிருதநூல் 'ஆர்யா' எனப்படும். பிராகிருத செய்யுட்களில் எழுதப்பட்டுள்ளது. தேசீ பதங்களுக்குச் சமமான 'தத்பவ' பதங்கள் குறிப்பிட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்குப் பிறகும் ஸமஸ்கிருதத்தில் ஹேமசந்திரர் வியாக்கியானம் கொடுத்திருக்கிறார். தேசீ வார்த்தைக்குச் சமமான ஸம்ஸ்கிருதபதத்தையும், அது ஏற்பட்ட காரணத்தையும் விவரித்திருக்கிறார். சில பதங்களை நன்றாக விளக்கிக்கூற வேண்டி ஒரு 'பிராகிரதசாதா'வும் எழுதியிருக்கிறார். எட்டு அத்தியாங்களாகப் பிரித்திருக்கிறார். மூலத்திலும் வியாக்கியானத்திலுமுட்பட 3978 பதங்கள் உள்ளன. ஸம்ஸ்கிருத வியாக்கியானத்தில் 782 'காதா'க்கள் உள்ளன. 3978 பதங்களில் 1500 பதங்களே சரியானபடி தேசீ என்று கூறலாம். ஏனைய பதங்கள் 'தத்பவ'[4] அல்லது தத்ஸம[5] வகையைச் சேர்ந்தன. 1500 பதங்களுள், 800 இந்தோ-ஆர்யம் எனப்படும் பிரிவைச் சேர்ந்தவை இந்நூலில் தேசி வார்த்தைகள் அனைத்தும் இடம் பெறவில்லை. ஒருக்கால் நூல் மிகவும் பெரிதாகிவிடும் என்ற காரணத்தால் பல பதங்களை விட்டிருக்கலாம். ஹேமசந்திரர் அனுதிகாலம் முதல் பல இடங்களில் புழக்கத்திலிருக்கும் தேசீ பதங்களை, ஒன்று சேர்ப்பது வாசஸ்பதிக்கே கடினமானது,[5] என்று மறைமுகமாக எழுதியிருப்பதில் இருந்து இது எவ்வளவு கடினமான முயற்சி என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

தேசீ என்ருல் என்ன?

பிராகிருத இலக்கண வரம்பின்படி பதங்கள் 1. தத்ஸமம் 2. தத்பவம் 3. தேசீ என்று மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவித மாறுபாடுமில்லாமல் பிராகிருதத்தில் காணப்படும் ஸமஸ்கிருத பதங்கள் தத்பவம் என்றும், ஸமஸ்கிருதத்துடன் எந்த விதமான சம்பந்தமுமில்லாத பதங்கள் தேசீ எனவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

தேசீ, தேய அல்லது தேசஜ பதங்களுக்குப் பலர் பலவிதமான அபிப்பிராயங்கள் தெரிவித்துள்ளனர். வாத்ஸ்யாயனர்[6] (கி.பி. 4-ஆம் நூற்ருண்டு) காமசாஸ்திரத்தில், பல நாடுகளிலுள்ள தேசீ பதங்களின் ஞானம், காமசாஸ்திர வல்லுனருக்கு அவசியம் என்று எழுதியிருக்கிருர்.

முத்ராராக்ஷஸத்தில்[7] விசாகதத்தர் கி.பி. (375-413) ஒற்றர் களுக்குத் தேசீ பதங்களின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிருர்.

உத்யோதன சூரி[8] (கி.பி. 8-ஆம் நூற்ருண்டு) ஜாலோரி (ஜோத் பூரிலிருந்து 75 மைல்) லிருந்து எழுதிய குவலயமாலா என்னும் நூலில் 18 தேச மொழிகளை விவரித்திருக்கிருர். 1. மகதம் 2. கொல்லம் 3. மத்ய தேசம் 4. ஆந்திரா 5. அந்தர்வேதி 6. கோசலம் 7. லாடம் 8. மாளவம் 9. கர்ஞடகம் 10. ஸிந்து 11. கூர்ஜரம் 12. மேரு 13. மஹாராஷ்டிரம் 14. தாஜிகம் 15. தக்கம் 16. கிரா (16 தான் குறிப்பிட்டிருக்கிறது.)

சாமுண்டராயரால்[9] எழுதப்பட்ட கோம்மடஸார என்ற பிராகிருத நூலில், கன்னடம், தேசீ என்று அழைக்கப்படுகிறது. வாக்பட்டர்[10] அபப்ரம்ஸ பாஷையைத் தேசீ என்று குறிப்பிடுகிருர். வாக்பட்டா லங்காரத்திற்கு வியாக்யானம் எழுதிய ஸிம்ஹதேவகணி கர்ஞடம், பாஞ் சாலம் முதலிய தேசங்களில் வழங்கும் பாஷையை அபப்ரம்ஸம் என்கிருர். ஞானதேவர்[11] (1290 கி.பி.) பகவத்கீதையைத் தேச பாஷையில் (மாரட்டி) பிரக்யாதி பெற்ற ஞானேச்வரீ என்று எழுதியிருக்கிருர். இவைகளி லிருந்து பொது ஜனங்களால் பேசப்படும் பாஷைகள் தேசீ என்ற தலைப்பின் கீழ் வருகின்றன என்று அறியலாம்.

சிலர் தேசீ பாஷையை ஒரு விதமான பிராகிருதம் என்றும் அழைக்கின்றனர். இது சிறிது மாறுபட்ட அபிப்ராயமாகத் தோன்றுகிறது. தண்டி[12] (660-680 கி.பி.) ஸ்வயம்பூ[13] (850-890 கி.பி.) முதலியவர்கள் இத்தகைய அபிப்ராயத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

தற்கால அகராதிகளின் அபிப்பிராயம் பல்வேறு விதமாக இருக் கின்றன:- ஆப்தே - ஒருவிதமான பிராகிருதம், மானியர்வில்லியம்ஸ்- ஸம்ஸ்கிருதத்திலிருந்து வேறுபட்ட கொச்சையான பாஷை, அந்தந்த தேசத்தைப் பொருத்து, பாயியஸந்த மஹன்னவா- ஒரு விதமான பிரா கிருதம், கிட்டல் - அந்தந்த தேசத்தை பொருத்த பாஷை, பிஸ்சலின் -[14]

அபிப்பிராயப்படி, ஸம்ஸ்கிருதத்துடன் அர்த்தத்துடனே அல்லது அமைப்புடனே சம்பந்தப்படுத்த முடியாத வார்த்தைகளே தேசீ என்று கருதப்படுகிறது.

ஹேமசந்திரரின்[15] அபிப்பிராயப்படி ஸம்ஸ்கிருத இலக்கண வரம்புக்குக் கட்டுப்படாத பதங்களும், ஸம்ஸ்கிருத இலக்கண வரம்புக்குக் கட்டுப்பட்டாலும் தற்சமயம் அகராதியில் அதே அர்த்தத்துடனில்லாத பதங்களும் தேசீ எனப்படும். இந்த அர்த்த மாறுபாடு, அனுதிகாலந்தொட்டு பிராகிருதத்திலுள்ளது. ஹேமசந்திரர், கோபால, துரோண தனபால, பாடலிப்ட, அவந்திஸுந்தரி, ஸாதவாஹன[16] என்று பலருடைய மேற்கோள்களை, தனது வியாக்கியானத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சில இடங்களில் இவர் கருத்து மாறுபட்டு இருக்கிறது. மாறுபட்ட இடங்களையும் குறிப்பிட்டிருக்கிறார்.

தேசீநாமமாலாவில் திராவிட பதங்கள் அனேகம் தென்படுவதற்குக் காரணம் என்ன?

ஸ்கந்த புராணத்திலுள்ள ஸஹ்யாத்ரி காண்டத்தில்[17] திராவிடம், (தமிழ்) கர்னடகம், கூர்ஜரம், மகாரஷ்டிரம், தெலுங்கு என்ற ஐந்தும் பஞ்ச திராவிடம் என்று அழைக்கப்படுகின்றன. கி.பி. 1425-ஆம் ஆண்டிலுள்ள கல்வெட்டில்[18] கன்னடிக, தமிழ, தெலுங்க, லாட (நான்கு தான் குறிப்பிடப்பட்டுள்ளன) என்று ஐந்து வகைப் பிராமணர்கள் குறிப்பிட்டிக்கின்றனர். தென்கூர்ஜரம் அதாவது லாடம் திராவிடத்துக்குள் அடங்கியிருக்கிறது.

சதவாஹனவம்சத்தின் இரண்டாம் சாதகர்ணியின் காலத்தில் கூர்ஜரமும் மாளவமும் ஆந்திரத்தின் ஆட்சியின் கீழ் அடங்கியிருந்தன. சாதவாஹன நாணயங்கள் குஜராத்திலுள்ள, ஆனந்த், கார்வன், காம்ரேஜ்[20] முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பாதாமி சாளுக்கியர்கள், இரண்டாம் புலிகேசியின்[21] தலைமையில் கூர்ஜரத்தைக் கைப்பற்றினர்கள். கூர்ஜரம் முழுமையாக அவர்கள் கையில் இருந்ததா என்பது பிரச்னைக்குரிய விஷயம். ஆனல் தென்கூர்ஜரம், அதாவது மஹீநதிக்கு கீழ் அவர்கள் கையில் இருந்ததற்குச் சான்றுகள் பல. தென்கூர்ஜரம் அல்லது லாடபிரதேசம் முறையே ராஷ்டிரகூடர்கள்,[22] கல்யாணிச் சாளுக்கியர்கள்[23], பின்பு யாதவர்கள்[24] கையில் இருந்திருக்கிறது.

இதே மாதிரி, அசோக மௌர்யனின் கல்வெட்டுகளிலிருந்து வடநாட்டு உறவு தென்னுட்டுக்கு இருந்தது தெளிவாகிறது. மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் உறவாட, பழக முக்கியமான அம்சம் பாஷை, ஒருவரை ஒருவர் அறிய உதவுவது சொற்கள். மக்களுடைய போக்கு

வரத்தினுல் ஒவ்வொரு பாஷையும், சில பிறபாஷைச் சொற்களை ஏற்றுக் கொள்கின்றன. எந்த ஒரு பாஷையும் கலப்படமில்லாதது என்று சொல்ல முடியாது. உதாரணமாக ஆங்கிலேயர்கள் கிஸ்மட் (விதி) ஷிகார் (வேட்டை) முதலிய வார்த்தைகளை ஆங்கிலமாகவே ஏற்றுக் கொண்டு விட்டனர். அறிவு முதிர, நாகரீகம் வளர எந்த பாஷையும் பிற சொற்களை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. உதாரணமாக ரயில் வண்டி என்ருல் எல்லோருக்கும் புரியும் 'அக்னிரதபதகாமினி' என்ருலே . . . . ? அனுதிகாலம் முதல் வழங்கி வரும் அந்தந்த பாஷைச் சொற்களை, மாற்ருமல் அப்படியே உபயோகித்து வருவது எல்லோருக்கும் எளிதில் புரியும். இந்த எண்ணத்துடன் பல பிராந்திய பாஷைச் சொற்கள் ஸம்ஸ்கிருதத்திலும் வழங்கி வந்திருக்கின்றன. சிலர் தேசீ பதங்களைக் கொச்சையான சம்ஸ்கிருதமாகக் கருதுகின்றனர்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில், தேசீநாம மாலாவிலுள்ள திராவிடச் சொற்களும், ஹேமசந்திரர் கொடுத்த அர்த்தமும் கொடுக்கப்பட்டுள்ளன. அனேகமாக எல்லாச் சொற்களின் அர்த்தமும் எமனு, பர்ரோ அவர்களுடைய திராவிடப் பேரகராதியில் கண்டுள்ளன. சில டாக்டர். கிட்டலுடைக் கன்னடப் பேரகராதியில் காணப்படும். சில சொற்கள் பிராகிருதத்தில் திராவிடச் சொற்களிலிருந்து சற்று மாறுபட்டிருக்கின்றன. சில அர்த்தங்களும் சற்று மாறுபட்டி ருக்கின்றன.

முடிவுரை

தேசீ நாமமாலாவிலுள்ள சில பதங்கள் மாறியிருக்கின்றன. சில தத்பவம் அல்லது தத்ஸமம் எனக் கருதலாம். சிலர் ஆர்யபாஷைக்குட் பட்டதல்ல. சில பாரசீகம், அரேபிய பாஷைகளைச் சார்ந்தன.[25]

தமிழில் 'ப' என்பது கன்னடத்தில் சில சொற்களில் தற்சமயம் 'ஹ' வாக மாறுபட்டு வருகிறது. உதாரணமாக பிடி, புலி, பால் முதலியன கன்னடத்தில் ஹிடி, ஹிலி, ஹாலு என்று வருகின்றன. இம்மாறுபாடு கி.பி. 1000க்கு பின் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு கன்னட இலக்கியத்திலும் சாஸனங்களிலும், தமிழ் சொற்கள் அப்படியே மாறுபடாமல் வந்துள்ளன. இதே மாதிரி ஸம்ஸ்கிருத பதங்கள் பசு, ப்ரக்க (ப்ரகாஹ) என்று பழைய(ஹளே) கன்னடத்தில் அவ்விதமே வந்துள்ளன. ஆனல் கி.பி. 1000 க்குப் பிறகு ஹசு ஹக்க என்று மாறுபட்டிருக்கின்றன. 'ஹாரம்' 'ஹனுமான்' என்ற பதங்கள் கூட பழைய கன்னடத்தில் சுத்தத் தமிழ் மாதிரி 'ஆரம்' 'அனுமான்' என்றே எழுதப்பட்டு வந்திருக்கின்றன. ஏனைய திராவிட மொழிகளை விட கன்னடத்தில் 'ஹ' என்ற எழுத்து அதிக உபயோகப்படுத்தப்படுகிறது.

தற்காலத் தென்குஜராத்தில் ஸூரத் முதலிய இடங்களில்

குஜராத்தின் பதங்களான ஸகுடி (அடுப்பு) ஸாண (மாமியார்) ஸாரு (நல்லது) முதலிய பதங்கள் ஹகுடி, ஹாஹீ, ஹாரு என்று வழங்கப் படுகின்றன. இந்த 'ஹ' என்ற எழுத்து ஸூரத்திலிருந்து அனேகமாக மேற்கிந்தியாவரை அதிகமாகக் காணப்படுகிறது. தமிழில் 'ஹ' (articulated aspiration) இல்லை. 'ஹ' வடமொழி அல்லது கிரந்த எழுத்தாகத்தான் கூறப்படும்.

இன்னொரு முக்கிய விஷயம். நமது கில்லிதண்டு என்ற விளையாட்டைக் குஜராத்தில் குல்லிதண்டா என்கிறார்கள். குஜராத்தில் விளையாடும் பொழுது கில்லியைத் தண்டால் அடித்த பிறகு ஆரம்ப இடத்திலிருந்து கில்லியின் தூரம் வரை தண்டால் அளக்கும் போது வகட, ரெண்டு, மூடு, நால், அங்கி, வங்கி, ஐகு என்று அளந்து விட்டு, மறுபடியும் வகடவிலிருந்து ஆரம்பிக்கிறார்கள். இது தமிழ் ஒன்று, ரெண்டு மாதிரியும், தெலுங்கு, கன்னட. ஒகடி, எரடு, மூடு, நால்கு, ஐது மாதிரியும் ஒலிக்கிறது.[26]

இந்தச் சொற்கள் குஜராத்தில் வழங்கி வருவதன் காரணம் என்ன? பலமுறை ஆந்திர, கன்னட அரசர்களின் படையெடுப்பின் மூலமாக இந்தச் சொற்கள் கலந்திருக்கலாம். மேலும் மனிதர்களுடைய போக்குவரத்துக்குப் பல காரணங்களுண்டு. வாணிபம், சுற்றுலா, க்ஷேத்திராடனம் முதலிய காரணங்களுக்காக வரும் ஜனங்கள் தற்செயலாகச் சில சொற்களைத் தங்கள் பாஷையுடன் கலந்து சென்றிருக்கலாம். இன்றும் தமிழ் நாட்டில் சபாஷ், தமாஷ், வாபஸ், தபா, குறிச்சி (குர்ஸி) முதலிய வடஇர்திய‌ச் சொற்களை, பாமரரும் பண்டிதரும் தாராளமாக உபயோகிப்பதுண்டு. இவைகள் நமது உணர்வுகளையும், சொல்ல வேண்டிய விஷயங்களையும் எளிதில் பிறருக்குப் புரிய வைக்க உதவுகிறது. இச்சொற்கள் கலைஞர்கள் மூலமாகவும், வணிகர்கள் மூலமாகவும் கலந்திருக்கலாம்.

---

1. பாவு தாய்ஜீ J.B.B.R.A.S. IX p. 224.
2. ப்யூலர் 'Desisabda Sangraha of Hemachandra' Ind. Ant, II pp. 17-21.
3. பிஸ்சல் 'Desinamamala of Hemacandra' (Bombay Sanskrit Series, No. XVII 1880) Revised edition by Ramanujaswamy P.V. Bhandarkar Oriental research Institute, Poona 1938.
4. மேற்படி VIII; 77
5. தேசீநாமமாலா 1:4
6. வாத்யாயன *'காமஸூத்ர'* ed. by Upadya S.C. Pub. by Taraponewala. 1961, p. 76.
7. விசாகதத்தா 'முத்ராராக்ஷஸம் ed. by காசிநாதரயம்பகதிலங் (B. S. S XXVII 1908.
8. உத்யோதன ஸூரி குவலயமாலா ஏ.என். உபாத்யே (ஸிங்கி ஜைன கிரந்த மாலா XXXXV, 1951) 149:4 152-25

9. உபாத்யே ஏ.என். 'Materials for the interpretation of Gommata' I.H.Q. XVI p. 819.

10. வாக்பட்ட, வாக்பட்டாலங்கார 2.2

11. ஞானதேவா, ஞானேஸ்வரி XVIII 1690

12. தண்டின், காவ்யதர்ஸ 1.32

13. ஸ்வயம்பூ, பௌமசரியு ed. by H.C. Bayani (ஸிஸ்கி ஜைன ஸீரிஸ் No. 34) –1:2:1-4.

14. பிஸ்சல். ஆர். 'Comparative grammer of Prakrit Languages (Motilal Banarasidar 1957).

15. தேசிநாமமாலா 1:3–4

16. பலருடைய நூல்கள் தற்சமயம் கிடைக்கவில்லை. கிடைத்த நூல்களில் காணப் படும் செய்யுட்களில்லை உதாகாணம் தனபாலரின் பாயலச்சிநாமமாலாவில் இருப்பதாகக் கூறப்படும் செய்யுட்களில்லை. ஒருக்கால் தனபாலருடைய முழு நூலும் தற்சமயம் கிடைக்காமலிருந்திருக்கலாம். தேசிநாமமாலா VI 93 VII, 12 VIII 12

17. ஸஹ்யாத்ரிகாண்டம்— ஸ்கந்தபுராணம் ed. by Genson Dacunha 1877 A.D. p. 310.

द्राविडाश्चैव तैलगाः कर्नाटा मध्यदेशगाः।
गुर्जराश्चैव पञ्चैते द्राविडाः पञ्च कथ्यते॥

18. South Indian Inscription Vol. I p. 82-84

19. ஸெனர்ட் 'The inscription in the caves of Nasik, Ep. In. vol. VIII p. 60.

20. மஜூம்தார் எம். ஆர். 'Chronology of Gujarat (Boroda, 1960) p. 63. கத்ரே ஏ. எஸ். 'Some rare coins from Gujarat' JNSI XII p. 26.

21. ப்ளீட் ஜே.எப். 'Sanskrit and old Canarese inscriptions IA VII p. 161.

22. Hultzch, 'A Rashtrakuta grant of Krishna II Ep In. Vol. I p. 52

23. பார்னட் எல்.டி. 'Sogal inscription of the reign of Taila S. 902' Ep In. vol. XVI, pp. 1–9.

24. Archaeological Survey of Western India III, p. 83.

25. அம்ருதா ராவ், கே Persion and Arabic words in Desinamamala IA vol. XIVI, p 33.

26. ஜயசந்திர 'Telugu numerals in the North Indian play of Gulli-danda', Journal of Andhra Historical Research Society, vol. VIII, p. 151.

<✱>

வர்க்கம், செய்யுள்	தேசீநாம மாலாவில் உள்ள சொல்	ஹேமசந்திரரின் பொருள்	தமிழில் பொருள்	சமமான திராவிடச் சொல்	திராவிட மொழி
4.2	कल्ला	मद्यं	கள்	கள்	தமிழ், தெலுங்கு, கன்னடம்
10.35	कुढः	कुम्भः	குடம்	குடம்	தமிழ், கன்னடம்
15.40	कोडिल्लो	पिशुनः	கொடியவன்	கொடியோன்	தமிழ்
17.48	कोथलो	कुशलः	களஞ்சியம்	கொட்டகை	தமிழ், கன்னடம்
22.53	करडो	व्याघ्रः	புலி	கரடி	தமிழ், கன்னடம்
28.111	घंट्टो	नदीतीरम्	கட்டம்	கட்ட	கன்னடம்
9.34	छाणं, छाणी	गोमयं	சாணி	சாணி	தமிழ்
2.44	णेसरो	रवी	சூர்யன்	நேஸறு, ஞாயிறு	கன்னடம், தமிழ்
3.46	णण्णो	ज्येष्ठभ्राता	அண்ணா	அண்ணன்	தமிழ், கன்னடம்
5.10	तामरसं	जलोद्भवपुष्पम्	தாமரை	தாமரை	தமிழ், கன்னடம்
7.16	तुवरो	रसविशेषः	துவர்ப்பு	துவர்ப்பு	தமிழ், கன்னடம்
8.2	तण्णायं	आर्द्रम्	ஈரம்	தண்ணீர்	தமிழ், கன்னடம்
16.141	मम्मी, मामी	मातुलानी	மாமி	மாமி, அம்மாமி	தமிழ், கன்னடம்
18.144	मलओ	गिर्येकदेशः	குன்று	மலை, மாலி	தமிழ், கன்னடம், தெலுங்கு
6.40	वट्टिवं	परकार्यम्	பிறருடைய வேலை	வெட்டி	தமிழ்

வெங்கங்குடி

அ. அப்துல்மஜீத்
பதிவு அலுவலர்
திருச்சிராப்பள்ளி

அமைப்பு: இவ்வூர் லால்குடி வட்டத்தில், திருச்சி மாவட்டத்திலுள்ளது. மண்ணச்சநல்லூரிலிருந்து கண்ணனூர் செல்லும் வழியில் 1.5 கி.மீ. தொலைவிலுள்ளது.

இவ்வூரில் கிராமத் தலைவருக்குச்சொந்தமான இடம் உள்ளது. முழுவதும் வேலிகாத்தான் என்னும் முட்செடிகளால் சூழப்பட்டுள்ளது. இவ்விடத்தில் சுவர்கள் இடையிடையே கருங்கற்களால் களிமண் கொண்டு கட்டப்பெற்றுள்ளன. இக்கற்கள் அழிந்த பண்டைய கோயிலின் பகுதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஒரு சிற்பத்தின் இடுப்பிலிருந்து கணுக்கால் வரை உள்ள உடைந்த பகுதியும் இங்குள்ள சுவரில் வைத்துக் கட்டப்பெற்றுள்ளது. நடுவில் ஒரு சிம்மத்தின் சிற்பம் உள்ளது. இவ்வுருவம் ஒரு கற்றூணின் அடிப்பகுதியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். சிற்ப அமைதியை நோக்கின் இவ்வுருவம் கி.பி. 13, 14-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகத் தோன்றுகிறது. இந்நிலத்தின் மேற்கே வயலிற்கு நீர் இறைப்பதற்காகப் புதிதாக ஒரு கிணறு தோண்டப்பெற்றுள்ளது. இக்கிணற்றைச் சுற்றிக் கருங்கற்கள் மிகுதியாகக் குவித்து வைக்கப் பட்டிருக்கின்றன. இக்கற்களிலும் பண்டைய கோயிலொன்றின் பகுதிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள் உள்ளன. இவ்வூரின் கிழக்கே அக்னீஸ்வரர் என்ற சிவன் கோயிலும், அய்யாளம் என்னும் பிடாரி கோயிலும் உள்ளன. இவ்வூரின் மேற்கே 'லக்ஷிமி நாராயணப் பெருமாள்' கோயிலுள்ளது.

அக்னீஸ்வரர் ஆலயம்: இவ்வாலயம் மிகவும் அழிந்த நிலையில் தோற்றமளிக்கிறது. இவ்வாலயத்தின் திருச்சுற்று மதில், பரிவார ஆலயங்கள் யாவும் அழிந்து காணப்படுகின்றன. தற்பொழுது இவ்வாலயத்தைச் சுற்றி நந்திகளுடைய சிற்பங்களும், அழிந்த கருங்கற் கட்டடப் பகுதிகளும் சிற்பங்களின் பகுதிகளும் மிகுந்து காணப் படுகின்றன. கட்டடப்பகுதிகளின் அமைப்பும் சிற்பங்களின் தோற்றமும் கி.பி. 15, 16-ஆம் நூற்றுண்டினதாக இருக்கலாமென எண்ணத்தோன்றுகிறது. இக்கோயிலின் தெற்குச் சுவரில் உளத்தூர் 'இ' என்று பொறிக்கப் பட்டுள்ளது. இவ்வெழுத்தமைதி கி.பி. 18-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. இதைத் தவிர வேறு கல்வெட்டுக்கள் இங்கு காணப் படவில்லை.

லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயில் : இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மஹாமண்டபம் போன்ற பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலின் தற்போதைய அமைப்பை நோக்கின் முன்பிருந்த இக்கோயிலைத் திருப்பணிச் செய்து அமைத்திருப்பது தெரிய வருகிறது.

சிற்பங்கள் : இவ்வாலயத்தின் கருவறையில் விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி, ஆகியோருடைய சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்களின் சிற்ப அமைதி கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் காணப்படுகிறது.

கல்வெட்டுக்கள் : இவ்வாலயத்தில் மொத்தம் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. அவை துண்டுக்கல்வெட்டுக்களே. இவ்வாலயத்தில் நடந்த திருப்பணியின்போது பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

இக்கல்வெட்டு மஹாமண்டபத்திலிருந்து அர்த்தமண்டபம் செல்லும் நுழைவாயிலின் மேல் நிலைக்கல்லில் உள்ளது.

1. கீலக வருஷம் கெற்பகரக மண்டபம் மழநாட்டுக்
   கோன் தன்மம்.

இவ்வாலயத்தின் வடபுற அதிஷ்டானப் பகுதியில் இவ்விருகல்வெட்டுப் பகுதிகள் உள்ளன.

1. . . . . .
2. . . ஏற்ற பாடறக நரசிங்கமங்கலத்து செங்காவூர் பற்றி
3. . . வடபாற்கெல்லை நத்தத்துக்குத் தெற்குமாக இசைந்த
   இன் . . .
4. . . ப்புன்செய் குழி இரண்டாயிரமும் ஒரு பூவும் ஆறம் . .
5. பெருமாளு மிவ்வனைவோம் இப்படிக்கு மணலூர்
   பொய்கெ . . .

1. . . . . .
2. பிரமதேசம் திருவெள்ளறைப் பிடாகை திருதாங் . .
3. சய்குழியிரண்டாயிரமும் இன்னுள் முதல் இன்னு . .
4. இப்படிக்கு . . . . பாக்கெல்லை . . . .

இக்கல்வெட்டு இவ்வாலயத்தின் தென்புற அதிஷ்டானத்திலுள்ளது.

1. . . . . .
2. க்கு இசைந்த கீழ்பாற் . . . .
3. ன்னிலம் ஆறு மாமுக்காணியும் . . .
4. த்து காணியாக ஶாஸணம் பண்ணிக் குடுத்தோம் ஆதி
   சண்டெஶ்வர தேவர் கன்மிகளுக்கு மணலூர்ப்பெ . . .
5. [டே]வண்டிக கொள்ள ஶாஸணம் எழுதினேழுதினேன்
   ராஜ . . சோழநல்லூர் திருமேற்கோயில் காணியுடை . . .

இக்கல்வெட்டுக்கள் முழுமை பெறுமலுள்ளதால் எந்தவித முடிவிற்கும் வரஇயலவில்லை.

கண்ணனூர் சாலையிலிருந்து இவ்வூருக்குள் நுழையும் பொழுது இவ்வூரின் வடக்கில் செவ்வக வடிவில் ஒருகற்றூண் நடப்பெற்றுள்ளது. இத்தூண் அருகே ஒரு பிள்ளையார் கோயில் உள்ளது. இத்தூணில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துக்கள் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளமையால் படிக்க இயலவில்லை. திருமேனிகள் ஊர்வலம் வரும்பொழுது இத்தூணின் அருகே நின்று அதன் பின்னர்தான் செல்லுமெனக் கூறுகின்றனர். இக்கல்வெட்டு பத்துவரிகளில் எழுதப் பெற்றுள்ளது. ஒவ்வொரு வரிக்கும் இடையே கோடு இடப்பெற்றுள்ளது.





இசைக்கருவி வாசிக்கும் மகளிர் சிற்பங்கள், அம்மன் சந்நிதி, சிதம்பரம், தென்னார்க்காடு மாவட்டம், கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்

இதழ் 13 ★ பிங்கள ஆண்டு சித்திரைத் திங்கள் ★ விலை ரூ. 1-50

அட்டைப்படம்

நான்முகன் - காவேரிப்பாக்கம் - பல்லவர் காலம் - எட்டாம் நூற்றாண்டு.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக ஷெ துறையின் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: டாக்டர் இரா. நாகசாமி,